GOKULAM

ஜூன் 2007 ■ 80 பக்கங்கள் ■ விலை ரூ.8/-

கோகுலம்

தைகளின் குதூகலம்!

அக்கரைப் பள்ளிகள்!





உள்ளே...

அழ.வள்ளியப்பா நினைவுச் சிறுகதைப் போட்டி!











எஸ்.சரண்யா, ஒன்பதாம் வ…
தி ஆக்ஸ்போர்டு சீனியர் செகண்டரி பள்… ரு

கோகுலம்

ஜூன் 2007 மலர் : 25 இதழ் : 5

கல்கி நிறுவன வெளியீடு
தரம் நிரந்தரம்

உயிர்களிடத்தில் அன்பு வேணும்–தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்
–பாரதியார்

உள்ளே...





கல்கி

கோகுலம்

பரதன் பப்ளிகேஷன்ஸ்
பிரைவேட்லிமிடெட்டிற்காக
பரதன் அச்சகத்தில்
அச்சிட்டு வெளியிடுபவர் :
லக்ஷ்மி நடராஜன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

ஆசிரியர்:
சீதா ரவி

உதவி ஆசிரியர்:
ஆரணி யுவராஜ்

வடிவமைப்பு :
எஸ். ஸ்டீஃபன், எம். மோகன்,
ச. கார்த்திகேயன்

தொலைபேசி :
2225 1522 / 2225 0823
2225 1324

தொலைநகல் :
044 - 22251021

மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு :
gokulam@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.96/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 25 யுஎஸ். டாலர்

Bharathan Publications Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.

குழந்தைகளின் குதூகலம்!

அன்புள்ள உங்களுக்கு...

கோடை விடுமுறை முடிந்து புதிய வகுப்பில் நுழையும் உங்கள் அனைவருக்கும் கோகுலம் சார்பாக வாழ்த்துகள். புதிய பாடங்கள் உங்களை மேலும் அறிவாளிகளாக்கட்டும். புதிய நண்பர்களின் அறிமுகம், உங்கள் மனத்தை உற்சாகமாக்கட்டும். நன்றாகப் படியுங்கள்; கிடைக்கும் ஒவ்வொரு நொடியையும் பயனுள்ளதாக மாற்றிக்



ஒவ்வொரு நொடியும் புதியது!

கொள்ளுங்கள்.

போனால் திரும்பக் கிடைக்காத விஷயங்களில் நேரமும் ஒன்று. இந்த நொடி சென்றுவிட்டால் அது மீண்டும் கிடைக்காது. போகும் நொடியை எந்த விஞ்ஞானத்தாலும் தடுத்து நிறுத்த முடியாது. ஆகவே நேரத்தைச் சரியாகப் பயன்படுத்துங்கள். அதே சமயம் கடந்து விட்ட காலத்தை எண்ணி வருந்தாதீர்கள். அதை மறந்து அடுத்த நொடியை உற்சாகமாக வரவேற்று பயன்படுத்துங்கள். ஏனெனில் ஒவ்வொரு நொடியும் நமக்காகவே புதிதாகப் பிறந்து வருகிறது. நேரத்தை முறையாக அழகாகப் பயன்படுத்தி, வாழ்வில் வெற்றி பெறுவோம்!

அன்புடன்
கோகு

இதனால் அறிவிப்பது...

அறிவிப்பு-1

மார்ச் மாத கோகுலத்துல அறிவிக்கப்பட்ட **'போஸ்டரைச் சேகரிங்க; பரிசுகளை வெல்லுங்க!'** என்ற புதுமைப் போட்டியில் நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்டிருக்கிறீர்கள்! 'பரிசீலனை கவனமாக நடந்து வருகிறது. வெற்றி பெற்று 'தீம் பார்க்' செல்லப்போகும் அதிர்ஷ்டசாலிகள் யார்? மேலும் பல புதுமையான பரிசுகளைப் பெறப்போவது யார்?

அறிந்து கொள்ள ஆவலுடன் இருக்கிறீர்கள் அல்லவா? ஒரு மாதம் காத்திருங்கள். முடிவுகள் அடுத்த இதழில் வெளியாகப் போகின்றன. என்ன, சந்தோஷம்தானே?



அறிவிப்பு-2

கோகுலம் ஆகஸ்டு 2007 இதழ் **'நகைச்சுவை சிறப்பிதழாக'** வெளிவரப் போகிறது. இதற்காக உங்களிடமிருந்து ஜோக்ஸ், உங்களுக்கு நடந்த நகைச்சுவையான அனுபவம், சிரிக்க வைக்கும் சிறுகதைகள், உங்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன. விரைந்து அனுப்புங்கள், சிறப்பிதழை அலங்கரியுங்கள்!

அனுப்ப வேண்டிய முகவரி :

ஆசிரியர், கோகுலம்,
(நகைச்சுவை
சிறப்பிதழ்)
47-NP, ஜவாஹர்லால்
நேரு சாலை,
ஈக்காட்டுதாங்கல்,
சென்னை - 600 032.



அறிவிப்பு-3

தவிர்க்க இயலாத காரணத்தால் மருதன் எழுதும் **'என் பெயர் தென்றல்'** தொடர்கதை இந்த இதழில் இடம் பெறவில்லை. அடுத்த இதழ் முதல் தொடர்ந்து வெளியாகும்.

கோலாகல ஆரம்பம்!



வணக்கம், நீண்ட காலமாக நீங்கள் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்த 'கோகுலம் சிறுவர் சங்கம்' இதோ ஆரம்பித்து விட்டது! கடந்த மாதம் இது குறித்து அறிவிப்பு வெளியானதுமே நல்ல வரவேற்பு. கடிதங்கள் மூலம் உங்களின் ஆர்வத்தை வெளிப்படுத்தி இருந்தீர்கள். ஓர் அன்பர் போன் செய்து பேசினார். அவர் சிறு வயதில் கோகுலம் சிறுவர் சங்கத்தின் உறுப்பினராக இருந்தவராம். 'இப்போது மீண்டும் சிறுவர் சங்கம் தொடங்குவதில் மகிழ்ச்சி. என்னால் முப்பது சிறுவர் சிறுமிகளைச் சேர்க்க முடியும். அடுத்த மாத கூப்பனுக்காக ஆவலுடன் காத்திருக்கிறேன்' என்று தெரிவித்தார்.

உங்களின் கடிதங்களைப் பார்க்கிறபொழுது, நினைத்ததை விட அதிக அளவில் சிறுவர் சங்கம் வளரும் என்ற நம்பிக்கையும், உற்சாகமும், வேகமும் ஏற்படுகிறது. சரி, இந்தச் சங்கத்தில் எப்படி உறுப்பினராகச் சேருவது என்ற விவரத்தைப் பார்ப்போமா?

யார் சேரலாம்?

தமிழ் எழுத, படிக்கத் தெரிந்த குழந்தைகள் உலகில் எங்கிருந்தாலும் அவர்கள் கோகுலம் சிறுவர் சங்கத்தில் சேரலாம். பதினெட்டு வயதுக்கு உட்பட்டவர்களாக இருக்க வேண்டும். (பள்ளி இறுதி வகுப்பு வரை)

எப்படி அனுப்புவது?

இங்கு கொடுக்கப்பட்டுள்ள கூப்பனைப் பூர்த்தி செய்து எங்களுக்கு அனுப்ப வேண்டும். நாங்கள் உங்களுக்கு 'கோகூ' உருவம் பொறிக்கப்பட்ட ஓர் உறுப்பினர் அட்டையை அனுப்புவோம். அதில் உங்களைப் பற்றிய விவரங்களுடன், உங்களுக்கான உறுப்பினர் எண்ணும் கொடுக்கப்பட்டிருக்கும்.

பிறகு நீங்கள் கோகுலத்துக்கு அனுப்புகிற எந்த படைப்பாக இருந்தாலும் பெயருடன் உறுப்பினர் எண்ணையும் குறிப்பிடுங்கள்.

கொண்டாட்டம்!

உறுப்பினர்கள் இன்ப அதிர்ச்

சிகளை அவ்வப்போது எதிர்பார்க் கலாம். திடீர் பரிசுப் போட்டிகள் வைப்போம். வெற்றி பெறு வோரின் புகைப்படங்களை கோகுலத்தில் வெளியிட்டு சிறப்புச் செய்வோம். எங்கள் ஆசிரியர் குழுவைச் சேர்ந்தவர் கள் உங்கள் ஊருக்கு வந்தால், உங் களைச் சந்திப்பார்கள். அவர்களுடன் உங்கள் எண்ணங்களைப் பகிர்ந்து கொள்ளலாம்.





அது மட்டுமா? அவ்வபோது கோகுலம் சார்பாக விழா நடத்தும் எண்ணமும்கூட இருக்கிறது. அப் போது உங்களுக்காகப் பல்வேறு நிகழ்ச் சிகள் நடத்தப்படலாம். மொத்தத்தில் 'கோகுலம் சிறுவர் சங்கம்' உங்களுக்குப் பல புதிய அனுபவங்களை அளிக்கப் போகிறது.

'கோகுலம் சிறுவர் சங்க உறுப்பினராகுங்கள்;

கொண்டாட்டங்களுக்குத் தயாராக இருங்கள்!

குறிப்பு: இந்தக் கூப்பன் வரும் மாதங்களிலும் வெளி யாகும். கூப்பனை நகல் எடுத்து பூர்த்தி செய்யக் கூடாது. அசல் கூப்பன் மட் டுமே ஏற்கப்படும்.

கோகுலம் சிறுவர் சங்கம் - கூப்பன்

என் பெயர் : ....

வயது : ....

பெற்றோர் பெயர் : ....

வகுப்பு, பள்ளி : ....

: ....

வீட்டு முகவரி : ....

....

....

புகைப்படம்

நான் 'கோகுலம் சிறுவர் சங்கத்தின் உறுப்பினராகச் சேர விரும்பு கிறேன். உங்கள் நிபந்தனைகளை ஏற்றுக் கொள்கிறேன்.

(கையொப்பம்)

பிரவீன்

ஐந்து கோடி அகதிகள்!


இன்று உலகின் பல்வேறு நாடுகளில்; சுமார் ஐந்து கோடி மக்கள் தங்கள் நாட்டை விட்டு வெளியேறி அகதிகளாக வேறு நாடுகளில் தஞ்சம் அடைந்திருக்கிறார்கள். இப்படி இடம் பெயர்ந்து அகதிகளானவர்களில் சரிபாதி பேர் குழந்தைகள் என்பது அதிர்ச்சியளிக்கும் உண்மை. இத்தகைய குழந்தைகளின் நலனைப் பாதுகாக்கும் பொருட்டு, ஐ.நா. சபை ஆண்டுதோறும் ஜூன் நான்காம் தேதியை **போரினால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் தினம்** என்று அறிவித்துள்ளது. 1983-ல், இஸ்ரேல், தன் அண்டை நாடான பாலஸ்தீனம் மற்றும் லெபனான் மீது படையெடுத்தது. வீடும், குடும்பமும் இழந்து ஏராளமான அப்பாவிக் குழந்தைகள் அனாதைகளானார்கள். அவர்களுடைய உரிமைகளைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி ஐ.நா. சபை எடுத்த முடிவுதான் இந்த தினம். போரினால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் தினத்தன்று மனித உரிமை ஆர்வலர்கள் இறந்த குழந்தைகளுக்கு அஞ்சலி செலுத்தி, போரினாலும் இதர இடர்பாடுகளாலும் பாதிக்கப்பட்ட குழந்தைகள்மீது உலகம் அக்கறை செலுத்த வேண்டுமென வலியுறுத்துகிறார்கள்.



இப்போதெல்லாம் சுற்றுச் சூழல் பற்றி நிறைய பேசுகிறோம். காரணம் அந்த அளவுக்குச் சுற்றுச் சூழல் பாதிக்கப்பட்டுள்ளது. இது குறித்து உலக மக்களிடம் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த ஐக்கிய நாடுகள் சபை 1972-ஆம் ஆண்டில் ஓர் அறிவிப்பை வெளியிட்டது. அதன்படி, ஒவ்வோர் ஆண்டும் ஜூன் ஐந்தாம் தேதி **உலக சுற்றுச் சூழல் தினமாகக்** கொண்டாடப்பட்டு வருகிறது. ஒவ்வொரு வருடமும் ஒவ்வொரு நாடும் இந்த கொண்டாட்டத்தை முன்னின்று நடத்தும். 2007ஆம் ஆண்டு, இந்தப் பொறுப்பை நார்வே ஏற்றுக்கொண்டுள்ளது.

அது போலவே, ஒவ்வோர் ஆண்டும், சுற்றுச் சூழல் பிரச்னைகளுள் குறிப்பிட்ட ஒன்றை எடுத்துக் கொண்டு, அதனை பிரதான அம்சமாக வைத்து, நிகழ்ச்சிகள் நடத்துவதும் நடைமுறையில் உள்ளது.

ஒவ்வோர் ஆண்டும் ஜூன் பதினான்காம் தேதி, **உலக ரத்ததான தினம்** கொண்டாடப்படுகிறது. இந்த தினத்தின் சிறப்பு அம்சம் என்ன தெரியுமா? ரத்தம் ஒரே நிறத்தில் - சிவப்பாக இருந்தாலும், அதில் ஏ, பி, ஓ என்று சில பிரிவுகள் இருக்கின்றன என்று கண்டுபிடித்த 'கார்ல் லாண்ட்ஸர்' பிறந்த தினம். உலகின் பல்வேறு மருத்துவமனைகளிலும் சிகிச்சை பெறும் நோயாளிகளுக்குத் தேவையான ரத்தம் கிடைப்பதில்லை. எனவே, ஆரோக்கியமாக உள்ள மனிதர்கள், தங்கள் ரத்தத்தை தானமாகக் கொடுக்க முன்வந்தால், பல நோயாளிகள் உயிர் பிழைப்பார்கள். எனவே, மனிதர்கள் தாமாக முன்வந்து ரத்த தானம் அளிக்க ஊக்கமூட்டும் விதமாக உலக ரத்ததான தினம் கொண்டாடப்படுகிறது. ஆண்டுக்கு எட்டு கோடி பாட்டில் ரத்தம் தானமாகப் பெறப்படுகிறது. ஆனாலும், மக்கள் தொகை மிகுந்த நாடுகளில், ரத்தத்துக்குத் தேவை அதிகமாக உள்ள நாடுகளில், ரத்த தானம் செய்வோர் எண்ணிக்கை கணிசமாக இல்லை. எனவே, ரத்த தானத்தின் அவசியத்தை வலியுறுத்தி பல்வேறு நிகழ்ச்சிகள் இந்த நாளில் நடத்தப்படுகின்றன. ரத்த தானம் செய்வதை வழக்கமாகக் கொண்டவர்கள் இந்த நாளில் கௌரவிக்கப்படுகிறார்கள்.




ஜூன் மாதம் மூன்றாவது ஞாயிற்றுக்கிழமையை **தந்தையர் தினமாக** அமெரிக்காவில், கொண்டாடத் தொடங்கினர். 'சொனோரா டோட்' என்ற பெண்மணிதான் இதன் மூலகர்த்தா. அவருடன் கூடப் பிறந்தவர்கள் ஐந்து பேர். கடைசி குழந்தை பிறந்த சமயம் பிரசவத்தின் போதே அவரது அம்மா இறந்துவிட, அவரது அப்பா தனி ஒரு மனிதராக இருந்து வளர்த்து ஆளாக்கினார். தன் அப்பாவின் தன்னலமற்ற தியாகங்கள் சொனோரா டோட்டை பிரமிப்பிலாழ்த்தின. தன் தந்தை பிறந்த ஜூன் மாதத்தின் மூன்றாம் ஞாயிற்றுக்கிழமையினை 'தந்தையர் தினமாக' கொண்டாடத் தீர்மானித்தார். இது நடந்தது 1910ஆம் ஆண்டு. 1972ல் ஜனாதிபதி நிக்சன் அதற்காக சட்டம் இயற்றினார்.



எஸ்.சந்திரமௌலி


அப்பாவின் வேலை!
கதை : யுவா
படம் : ராம்கி
கண்ணன் எட்டாம் வகுப்பிலிருந்து ஒன்பதாம் வகுப்புக்கு தேர்ச்சி பெற்று, புதிய பள்ளிக்குச் சென்றான். வகுப்பில்...
ஹலோ, என் பெயர் கண்ணன்!
நான் ரகு.
ஐ'யம் கார்த்திக்
உணவு இடைவேளையில்.
கண்ணா, ரகுவோட அப்பா யாருன்னு தெரியுமா?
தெரியாதே.... யாரு? ரொம்பப் பெரிய ஆளோ...?
மியூசிக் டைரக்டர். டி.வி.யில நிறைய சீரியலுக்கு இசை அமைப்பவர்.
கார்த்திக் அப்பா பிஸினஸ்மேன். ஆமா, உன் அப்பா என்ன செய்யறார்?
எ... என்னோட அப்பா, மிலிட்டரில பெரிய பதவியில இருக்கார்.
அட, என்னோட தாத்தாகூட மிலிட்டரியில இருந்து ரிட்டயர் ஆனவர்தான்.


மாலை பள்ளி விட்டதும்...
கண்ணா, என்னோட வீடு பக்கத்துத் தெருவுலதான் இருக்கு. வர்றியா?
இன்னிக்கு வேண்டாமே! இன்னொரு நாள் பார்ப்போம்...
அஞ்சே நிமிஷம், ஒரு காபி சாப்பிட்டுட்டுப் போயிடு. நேத்து ரகுகூட வந்தான்.
ஆமா, கண்ணன், கார்த்திக்கோட தாத்தா ரொம்ப நல்லா பேசுவாரு.
கண்ணன் சம்மதிக்க, மூவரும் கிளம்பினர்
கார்த்திக் வீட்டில் -
அம்மா, இவன் பேர் கண்ணன்.
புது ஸ்டூடன்ட்டா? வா கண்ணா!
வணக்கம் ஆண்ட்டி!
ஹாய் ரகு! எப்படி இருக்கே?
நல்லா இருக்கேன் தாத்தா
இது யாரு...? இதுக்கு முன்னால் பார்த்த ஞாபகமில்லையே...


ஆமா, தாத்தா இவன் அப்பாவும் மிலிட்டரிலதான் வேலை செய்யறார்.
அப்படியா? இந்த முக ஜாடையைப் பார்த்த மாதிரி இருக்கே! உன் அப்பா பேர் என்ன?
என் அப்பா பெயர் சுந்தரம்!
அடடே, சுந்தரம் பையனா? வெரிகுட்! உன் அப்பா செய்யற தென்னாட்டுச் சமையல் ரொம்ப பிடிக்கும்.
ரகுவும் கார்த்திக்கும் திடுக்கிட்டார்கள்.
சமையலா?
ஏன் அப்படி ஆச்சர்யப்படறீங்க? அவன் கேட்டரிங் சுந்தரத்தோட மகன்.
ஸாரி தாத்தா, என் அப்பா மிலிட்டரியில பெரிய பதவியில இருக்கறதா பொய் சொல்லிட்டேன். ஏன்னா சமையல்காரர்னு சொன்னா எல்லோரும் கேலி பண்ணுவாங்கன்னு...
புரியுது கண்ணா. சினிமாக்களில் கூட நகைச்சுவைங்கற பேருல கிண்டல் செய்யறாங்க. சமையலும் ஒரு முக்கிய வேலையே. மத்தவங் களுக்காகவே பொய் சொல்ல வேண்டாம்.
சரி தாத்தா, இனிமே யார் கேட்டாலும் வெட்கப்படாம கம்பீரமா சொல்வேன்.
வெரிகுட் கண்ணா.
கண்ணனைத் தாத்தா அணைத்துக் கொண்டார்.

கோள்களின் வரலாறு



''ஆண்ட்டி! பவர்கட்' ஆயிடுச்சில்லே, காலையிலதான் சரியாகுமாம். நாங்க எல்லாம் மொட்டை மாடியில படுத்துக்கப் போறோம். நீங்களும் வர்றீங்களா ஆண்ட்டி?''

''ஓ! வாங்க போகலாம். இன்னிக்கு பௌர்ணமி. நிலவு முழுமையா ஒளி வீசுது. நிலவுன்னதும் நேற்று படிச்ச ஒரு புத்தகம் நினைவுக்கு வருது. புத்தகத்தோட பெயர் 'கோள்கள் குள்ளக்கோள்கள் புறக்கோள்கள்'. கோள்களைப் பற்றிய பல்வேறு விஷயங்கள் எளிமையாகவும் தெளிவாகவும் நூலில் சொல்லப்பட்டிருக்கு.''




''நாளைக்கு அந்தப் புத்தகத்தை எனக்குக் கொடுங்க ஆண்ட்டி, படிச்சுட்டுத் தரேன்.''

''சரி விழி! அடுத்து ஒரு கவிதைத் தொகுப்பு. கோகுலம் உட்பட பல்வேறு இதழ்களில் வெளியான தனது கவிதைகளைத் தொகுத்து வெளியிட்டிருக்கிறார் கவிஞர் சி.விநாயகமூர்த்தி. புத்தகத்தோட பெயர் 'உருண்டு திரண்ட பானை' இன்னிக்குத்தான் எல்லா கவிதைகளையும் படிச்சேன்.''

''ஒரு கவிதையை ராகத்தோடு பாடுங்க ஆண்ட்டி, நாங்கள் கேட்டுகிட்டே தூங்குறோம்.''

* கோள்கள் குள்ளக்கோள்கள் புறக்கோள்கள் - முனைவர் த.வி. வெங்கடேஸ்வரன் - அறிவியல் வெளியீடு, 245, அவ்வை சண்முகம் சாலை, கோபாலபுரம், சென்னை - 86, விலை ரூ.60/-

* உருண்டு திரண்ட பானை - சி.விநாயகமூர்த்தி - ஈஸ்வரி புத்தக நிலையம், ஸ்ரீ ஆண்டாள் சன்னதி, ஸ்ரீவில்லிபுத்தூர்- 626125. விலை ரூ.36/-





ஹாய் ஃப்ரண்ட்ஸ்! லீவெல்லாம் முடிஞ்சதா? புது கிளாஸுக்குப் போகப் போறீங்க! புது டிரெஸ், புது ஸ்கூல் பேக், புது ஷூ... ஏன் சிலர் புது ஸ்கூலுக்கும் மாறுவீங்க. அங்கே புதுப்புது நண்பர்கள் கிடைப்பாங்க. அடடா, அதுக்குள்ளே லீவு முடிஞ்சுப் போச்சேங்கற வருத்தம் ரெண்டு மூணு நாளைக்கு இருக்கும். அப்புறம் புதிய பாடங்கள், நண்பர்களுடன் அரட்டை, வருத்

அக்கரைப்

தங்களை விரட்ட, ஜாலியாயிடுவீங்க!

உங்க பள்ளியைப் பத்தி உங்களுக்கு நல்லாத் தெரியும். வெளிநாடுகளில் பள்ளிகள் எப்படி நடக்குது? அங்கே முக்கியமான பாடங்கள் என்ன? குட்டீஸ்களுக்கு என்ன மாதிரி விளையாட்டெல்லாம் சொல்லித் தர்றாங்கன்னு தெரிஞ்சுக்க ஆசையா இருக்கா? வாங்க ஒரு விஸிட் பண்ணலாம்!



நெதர்லாந்து

ஐரோப்பிய கண்டத்தில் இருக்கிற ஒரு குட்டி நாடு நெதர்லாந்து.



இது ஒரு குளிர் பிரதேசம். இங்கே துவக்கப் பள்ளியிலேயே மூன்று வகையான கல்விமுறை இருக்கு. அவை பொதுக் கல்வி, சிறப்புக் கல்வி, உயர்தரமான சிறப்புக் கல்வி. ஐந்து வயது முதல் குழந்தைகளைத் துவக்கப் பள்ளியில் கட்டாய மாகச் சேர்த்துடணும்.

அங்கே சுமார் ஏழாயிரம் துவக்கப் பள்ளிகள் இருக்கு. 'டச்சு' மொழி அந்நாட்டின் தாய்மொழி. அதனால் முதல் பாடப் பிரிவில் டச்சு மொழி கற்றுத் தரப்படுகிறது. இது தவிர ஆங்கிலம், கணிதம், இயற்பியல், கலை சார்ந்த பாடங்கள் உண்டு. வரலாறு, புவியியல், சமுதாயம், தொழில் நுட்பம் மற்றும் ஆரோக்கியமான நடைமுறைகளும் கற்றுத் தரப்படுகின்றன. ஜெர்மன் மற்றும் பிரெஞ்ச் மொழிகளும் மாணவர்களின் விருப்பத்திற்கேற்ப கற்றுத் தரப்படுகிறது. அங்கே ஆண்டுத் தேர்வுகள் பிப்ரவரி மாதத்தில் நடைபெறும்.

பள்ளிகள்!



சிங்கப்பூர்

சிங்கப்பூரைப் பற்றி உங்களுக்கெல்லாம் ஓரளவுக்குத் தெரிஞ்சிருக்கும். இங்கே வெளிநாடுகளிலிருந்து குடியேறிய மக்கள் அதிகம். அதனால் அவரவர் தாய் மொழிக்கு முன்னுரிமை அளிக்கும் வகையில் பள்ளிகள் செயல்படுது. அதற்கேற்ப பாடத்திட்டங்கள் அமைக்கப்பட்டிருக்கு. அதற்காக சிங்கப்பூர் அரசுக்கு நாம ஸ்பெஷல் தேங்ஸ் சொல்லியே ஆகணும்!

இங்கே துவக்கப் பள்ளியில் அதிகமான மதிப்பெண் எடுத்து தேர்ச்சிப் பெற்ற மாணவர்கள், நடுநிலைப் பள்ளியில் 'எக்ஸ்

வெ.ஜனனி



பிரஸ்' என்ற பிரிவில் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். சுமாரான மதிப்பெண்களை எடுத்தவர்கள் 'நார்மல்' என்ற பிரிவில் சேர்க்கப்படுவார்கள். எக்ஸ்பிரஸ் கோர்ஸின் பயிற்சிக் காலம் நான்கு ஆண்டுகள். நார்மல் கோர்ஸின் பயிற்சிக் காலம் ஐந்து ஆண்டுகள். நடுநிலைப் பள்ளியில் தேர்ச்சி பெற்ற பின், ஜூனியர் காலேஜ், பாலிடெக்னிக் மற்றும் டெக்னிகல் கல்வி பிரிவுகளில் சேரலாம்.

ஆஸ்திரேலியா!

இங்கே மாணவர்கள் அனைவரது தனித்திறமைகளை வளர்க்கும் விதமாகப் பள்ளிகள் செயல்படுது. அதற்கேற்ப பாடத் திட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. பெரும்பாலும் ஆசிரியர் - மாணவர்கள் கலந்துரையாடல் மூலமாகவே வகுப்புகள் நடக்கும். உலகிலேயே சிறந்த தொழில்நுட்பக் கல்வியை அளிப்பது ஆஸ்திரேலியாதான் என்ற கருத்துண்டு.



இங்கே போர்டிங் ஸ்கூல், ஆண்கள் அல்லது பெண்களுக்குத் தனிப்பட்ட பள்ளிகள், மதச் சார்புடைய பள்ளிகள் என்று பல வகைகள் உள்ளன. ஆங்கிலம், கணிதம், அறிவியல், கலை, தொழில்நுட்பம் தவிர விவசாயம், இசை, நடனம் போன்றவையும் கற்றுத் தரப்படுகின்றன. விளையாட்டுகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. நீச்சல், கிரிக்கெட், ஹாக்கி, கால் பந்து, கூடைப்பந்து, தடகளம் ஆகியவற்றைத் தீவிரமாக பயிற்றுவிக்கிறார்கள். அதனால்தான் விளையாட்டுகளில் அவர்கள் அசைக்க முடியாத சக்திகளாக இருக்கிறார்கள்.

இப்படியே இன்னும் நிறைய நாடுகளைப் பற்றிச் சொல்லிக் கொண்டே போகலாம். எங்கு படித்தாலும் புத்திசாலியாகத் திகழ சில விஷயங்கள் முக்கியம். படிக்கும் படிப்பு மீது ஆர்வம், பாடங்களை நடத்தும்போது கவனத்தை வேறு விஷயங்களில் சிதற விடாமல் மனத்தில் உள்வாங்குதல், அன்று நடத்திய பாடங்களை அன்றன்றே படித்தல், ஆசிரியர்களை மதித்து நடத்தல், சக மாணவர்களுடன் நட்புடன் பழகுதல். இதெல்லாம் இருந்தால் போதும், நீங்கள்தான் நெம்பர் ஒன். நல்லா படிங்க, வருங்காலத்தில் சிறந்த விஞ்ஞானியாக, பொருளாதார நிபுணராக, பல்துறை வித்தகராக உருவாகுங்க. ஓ.கே. பை!

அறிஞர் அண்ணா

வேலி!



பெரியவர்கள் சொன்ன குட்டிக் கதைகள் : 3

ஓர் ஊரில் பாட்டியும் பேரனும் இருந்தார்கள். ஒருமுறை பாட்டி பூசணிக்காய் விதையைக் கொண்டு வந்தாள்.

''பேரா... இதைத் தோட்டத்தில் ஆழமாகக் குழி தோண்டிப் புதை. தினமும் நீர் ஊற்றி, கவனமாக வளர்த்து வா. பூசணிக்காய் முளைத்ததும், பறித்து, சமையல் செய்யலாம்'' என்றாள்.

பேரன் சம்மதித்தான். தோட்டத்தில் குழியைத் தோண்டி பூசணி விதையைப் போட்டு மூடினான். தினமும் தவறாது நீர் ஊற்றினான். செடி முளை விட்டது. கொடி படர்ந்தது; பூ பூத்தது; காய் உருவாகத் தொடங்கியது.

அவனுக்கு மிகவும் மகிழ்ச்சி. 'விரைவில் பூசணிக்காய் பொரியல் சாப்பிடப் போகிறோம்' என்று நினைக்கையில் நாவில் நீர் ஊறியது. பாடுபட்டதற்கான பலன் கிடைக்கப் போகிறது என எண்ணி சந்தோஷப் பட்டான்.


பூசணிக்காய் பறிக்கும் பக்குவத்துக்கு வளர்ந்ததும், பாட்டியிடம் சென்று பேரன் விஷயத்தைச் சொன்னான். இருவரும் தோட்டத்துக்கு வந்து பார்க்க, அதிர்ச்சி! அங்கே பூசணிக்காயைக் காணவில்லை.

பேரனுக்கு அழுகை வந்துவிட்டது. ''பாடுபட்டதெல்லாம் வீணாகி விட்டதே'' என்று புலம்பினான்.

அப்போது பக்கத்து வீட்டுப் பெண்மணி ''தம்பி, நீ வியர்வை சிந்த பாடுபட்டாய். எல்லாம் செய்த நீ ஒரு வேலியையும் போட்டிருந்தால், யாராவது பறித்துப்போய் இருப்பார்களா?'' என்று கேட்டாள்.

பேரனுக்குப் புரிந்தது. கடினமாக உழைத்தால் மட்டும் போதாது. உழைப்பின் மூலம் கிடைக்கும் பலனை அறிவோடு பாதுகாக்கும் வழியையும் பின்பற்ற வேண்டும் என்பதை உணர்ந்தான்.







அடுத்த இதழில் ஆரம்பம்...

அறிவுப் பூங்கா!

புதிய பகுதி

மலைகள்...
அதிசயக்
கட்டடங்கள்...
இசை...
விலங்குகள்...
எல்லாவற்றையும்
பற்றிய விந்தையான
தகவல்கள்!

படிக்க மட்டுமல்ல...
பாதுகாக்கவும்
வேண்டிய
அற்புதமான பொது
அறிவுப் பகுதி!



கோகுலம் வெள்ளி விழா +

குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா

நினைவுச் சிறுகதைப் போட்டி - 2007



மொத்தப் பரிசுத் தொகை ரூ.2000/-

முதல் பரிசு	ரூ.1000/-
இரண்டாம் பரிசு	ரூ. 500/-
மூன்றாம் பரிசு	ரூ. 500/-

(ரூ.250/- வீதம் இருவருக்கு)

சிறுவர் இலக்கியத்துக்காக தம்மை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்ட குழந்தைக் கவிஞர் அழ.வள்ளியப்பா நினைவாக இவ்வாண்டும் சிறுகதைப் போட்டி நடத்தப்படுகிறது.

கோகுலத்துக்கு இது வெள்ளி விழா வருடம். ஆகவே பரிசுத் தொகையும் இரட்டிப்பாகிறது. உற்சாகத்துடன் கலந்து கொண்டு சிறப்பியுங்கள்!



நிபந்தனைகள்:

* இந்தப் போட்டியில் பள்ளி மாணவ, மாணவியர் (+2 வரை) மட்டுமே கலந்து கொள்ள முடியும். ஆகவே போட்டிக்குக் கதையை அனுப்புவோர், தவறாமல் படிக்கும் வகுப்பு, பள்ளி முகவரி மற்றும் வீட்டு முகவரியைக் குறிப்பிட வேண்டும்.
* கதைகள் சிறுவர்களுக்கு ஏற்ற வகையில் இருக்க வேண்டும். சமூகம், நகைச்சுவை, துப்பறிதல் என்று எந்த வகையாகவும் இருக்கலாம். உங்கள் சொந்தக் கற்பனையாக இருத்தல் முக்கியம். அதற்கான உறுதிமொழி கடிதத்தை, கதையுடன் இணைக்க வேண்டும்.
* பிரசுரத்துக்குத் தேர்வாகாத கதையைத் திரும்பப் பெற, போதிய தபால் தலைகளை இணைக்கவும். ஒருவரே எத்தனை கதைகளை வேண்டுமானாலும் அனுப்பலாம்.
* அயல்நாட்டில் வசிப்பவர்கள் இந்தியாவில் நண்பர் அல்லது உறவினர் முகவரியை அளிக்க வேண்டும். கதைகளை முதல் முறை வெளியிடும் உரிமை கோகுலத்துக்கே. பிறகு இதன் உரிமை கதாசிரியரைச் சாரும்.
* போட்டி முடிவு வெளியாகும் வரை கடிதப் போக்குவரத்தோ, விசாரிப்போ கூடாது. போட்டி குறித்து எழும் பிரச்னைகளுக்கும் சந்தேகங்களுக்கும் ஆசிரியர் அளிக்கும் தீர்ப்பே இறுதியானது.
* கதைகள் வந்து சேர வேண்டிய முடிவு தேதி: **30.6.2007**

அனுப்ப வேண்டிய முகவரி:

ஆசிரியர், கோகுலம்
அழ.வள்ளியப்பா நினைவுச் சிறுகதைப் போட்டி - 2007
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல்,
சென்னை - 600 032

சூப்பர்



சீ.ஸ்ரீலட்சுமி
ஒன்பதாம் வகுப்பு,
அமிர்தா வித்யாலயம்,
சென்னை.

பேரறிஞர் அண்ணா

பல்லவ நாடு தந்த பகுத்தறிவுச் செல்வம், தென்னாட்டு ஜின்னா என்று தமிழ் மக்களால் பலவாறு போற்றப்பெற்றவர், பேரறிஞர்-அண்ணா.

இவர் திரு.நடராசன்-பங்காரு அம்மையார் அவர்களின் அருந்தவப் புதல்வராய்க் காஞ்சிபுரத்தில் பிறந்தார்.



நா.ஜனார்த்தனம்
ஒன்பதாம் வகுப்பு,
காமராஜ் மேல்நிலைப் பள்ளி,
நம்பியூர்.

பெங்குயின்

* பறவைகளின் பொதுப் பண்புகளிலிருந்து விலகி, நாம் சாதாரணமாகக் காணமுடியாத சூழ்நிலையில், குறைந்த எண்ணிக்கையில் வாழும் பறவையினம் பெங்குயின்.
* இப்பறவையினங்கள் தென்துருவ அண்டார்டிக்காவின் கடுங்குளிர் கடற்கரைப் பகுதிகளில் வாழ்கின்றன.
* இங்கு வெப்பநிலை 0° செல்சியஸை விடப் பல மடங்கு குறைவாக இருக்கும்.
* அங்குக் கடல் நீரும் பனிப்பாறைகளாகவே இருக்கும். இப்பறவைகளை முதன் முதலில் பார்த்த அறிஞர் மோண்ட்டி உர்வில்லே என்பவர்.



ஜோ.கலைவாணி
பத்தாம் வகுப்பு,
சாந்தி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி,
சிறுமுகை.

பொன்மொழிகள்

உண்மை, தூய்மை, சுயநலமின்மை ஆகிய இந்த மூன்றும் எங்கெல்லாம் காணப்படுகின்றனவோ அவற்றைப் பெற்றிருப்பவர்களை நசுக்கக்கூடிய ஆற்றல் விண்ணுலகிலோ மண்ணுலகிலோ எங்கும் கிடையாது.

கையெழுத்து!

பழமொழிகள்

→ நல்ல அறிவுரை விலைமதிப்பற்றது.
→ நன்மையே கொல்லும் விஷம்.
→ அழகு என்றும் நிலைத்திருக்காது.
→ சக்கரம் (முழு) வட்டம் சுற்றும்.
→ புகழினின் உயிரையும் கொடு.
→ இதயங்கள் இன்றி இல்லம் இல்லை
→ தோற்பதால் கற்கிறோம்.



மு.முத்து நாகப்பன்
ஆறாம் வகுப்பு,
ஸ்ரீமதி சுந்தரவல்லி
நினைவுப் பள்ளி,
சென்னை.

விடுகதை

1. வானத்துக்கும் பூமிக்கும் ஒரே கம்பி
அது என்ன?
விடை : மழை

2. நடமாடும் சின்னஞ்சிறு வீடு;
சிட்டம்மாவுக்கு அது கூடு
அது என்ன?
விடை : நத்தை



ர.கௌதமி
நான்காம் வகுப்பு,
பரம்வீர் மெட்ரிக்
மேல்நிலைப் பள்ளி,
தருமபுரி.

சர்.சி.வி.இராமன் பிறந்த நாள் - 07.11.1888
மறைந்த நாள் 21.11.1970

இவர் தமிழகத்தில் பிறந்தவர். அறிவியல் அறிஞர். 'சர்' பட்டம் பெற்றவர். ஒருமுறை கடல்வழி இங்கிலாந்து சென்றார். வானமும் கடலும் நீல வண்ணமாக இருப்பதைக் கண்டார். ஏனென்று சிந்தித்தார். ஆய்வில் ஆழ்ந்தார். கண்டார் இராமன் விளைவு. பெற்றார் நோபல் பரிசு. உற்றார் மகிழ்ந்தனர். உலகம் வியந்தது.



இரா.அஜய்டேனி
இரண்டாம் வகுப்பு,
செயின்ட் ஆன்ட்ரூஸ்
மெட்ரிக் பள்ளி,
கோவில்பட்டி.

வண்ணத்துப் பூச்சிகளும் விட்டில் பூச்சிகளும்!

ஆழி




வண்ணத்துப் பூச்சி

வண்ணத்துப் பூச்சிகளும் விட்டில் பூச்சிகளும் ஒரே மாதிரியாக இருந்தாலும் அவை வேறு வேறுதான்.

வண்ணத்துப் பூச்சிக்கு இருப்பதைவிட, விட்டில் பூச்சியின் உடலில் அதிகமான செதில்கள் உள்ளன.


வண்ணத்துப் பூச்சியின் உணர்கொம்புகளுக்கும் விட்டில் பூச்சியின் உணர் கொம்புகளுக்கும் வேறுபாடுகள் உள்ளன.



விட்டில் பூச்சி

வண்ணத்துப் பூச்சிகள் பகலில்தான் பறந்து திரியும். ஆனால் விட்டில் பூச்சிகள் இரவில்தான் வெளிவரும்; பகல் முழுவதும் மரப் பட்டைகளின் அடியிலும், இடிந்த கட்டடங்களின் இடுக்குகளிலும் மறைந்திருக்கும்.


வண்ணத்துப் பூச்சிகள் உட்கார்ந்திருக்கும்போது இறக்கைகளை உயர்த்தி வைத்துக் கொள்ளும். விட்டில் பூச்சிகள் உட்கார்ந்திருக்கும்போது இறக்கைகளைச் சமப் பரப்பில் வைத்துக் கொள்ளும்.



வண்ணத்துப் பூச்சி, விட்டில் பூச்சி — இவற்றின் இரை, பூக்களில் உள்ள தேன். வாயில் உள்ள உறிஞ்சு குழலால் இவை தேனை உறிஞ்சுகின்றன. இவற்றுக்கு இரண்டு கண்கள் உண்டு. ஒவ்வொன்றும் ஆயிரக் கணக்கான சிறிய கண்கள் சேர்ந்த கூட்டுக் கண் ஆகும்

வண்ணத்துப் பூச்சி, விட்டில் பூச்சி — இவற்றின் வாழ்க்கையில் 4 நிலைகள் உண்டு.


ஒரு வண்ணத்துப் பூச்சி உருவாதல்:



முட்டை



புழு





கூட்டுப் புழு



பூச்சி

வண்ணத்துப் பூச்சிகளில் சுமார் 10,000 வகைகள் இருக்கின்றன. ஒவ்வொரு வகை வண்ணத்துப் பூச்சியும் அந்த வகைக்கென்று உள்ள ஒரு செடியில் தான் முட்டை யிடும்! 10,000 வகை வண்ணத்துப் பூச்சிகள் முட்டை யிட வேண்டுமானால், 10,000 வகையான செடிகள் தேவைப் படும்!








உலகிலேயே மிகவும் பெரிய வண்ணத்துப் பூச்சி 'புறவைச் சிறகு' வண்ணத்துப்பூச்சிதான். இதன் இரண்டு சிறகுகளையும் விரித்தால் 31 செ.மீ. இருக்கும்! இது பறக்கும் போது பறவை பறப்பது போல் இருக்கும்!

மிகவும் சிறியது 'பிக்மி' வண்ணத்துப் பூச்சி. இது 1 செ.மீ. தான் இருக்கும்!




ஆசிய நாடுகளில் உள்ள 'இலைச் சருகு' வண்ணத்துப்பூச்சிகளின் இறக்கைகள், காய்ந்த இலைகள் மாதிரியே இருக்கின்றன. இவை செடிகளில் உட்கார்ந்திருந்தால் தெரியாது!




'கோஸ்டா ரிகா' நாட்டில் இறக்கைகளில் 88 என்னும் எண்கள் உள்ள வண்ணத்துப் பூச்சிகள் இருக்கின்றன.


'மோனார்க்' வண்ணத்துப் பூச்சிகள் ஆண்டு தோறும் கிழக்கு கனடாவிலிருந்து தெற்கு மெக்ஸிகோவுக்கு— சுமார் 3200 கி.மீ. தூரம்— பறந்து செல்கின்றன. காற்று பலமாக வீசாவிட்டால், எங்கேயும் உட்காராமல், ஒரே தடவையில் அவை 1000 கி.மீ. தூரம்கூட பறப்பது உண்டு. அதற்கான சக்தி அந்த சின்னஞ்சிறு உடலுக்கு எப்படிக் கிடைக்கிறது என்பது ஆச்சரியம்தான். தெற்கு மெக்ஸிகோவுக்குச் சென்ற பிறகு, அவை முட்டை யிட்டதும் இறந்து விடுகின்றன. அந்த முட்டைகளிலிருந்து உருவாகும் அவற்றின் சந்ததிகள், தாய் புறப்பட்டு வந்த கிழக்கு கனடாவுக்கே திரும்பி வந்துவிடுகின்றன! இதுதான் இயற்கையின் விசித்திரம்!



ஸ்காட்லாந்தில் இரண்டு இறக்கைகளிலும் சிலுவை உருவம் உள்ள வண்ணத்துப் பூச்சிகள் இருக்கின்றன. அங்கே உள்ளவர்கள் அவற்றைப் புனித உயிர்களாகக் கருதுகிறார்கள்.




தென் அமெரிக்காவில் 'நாய்த்தலை' வண்ணத்துப் பூச்சிகள் இருக்கின்றன. இவற்றின் முன்பக்கத்து இறக்கைகளில் நாயின் தலை போன்ற உருவங்கள் உள்ளன.





ஒரு வண்ணத்துப் பூச்சியைத் தொடர்ந்து சென்று, அதன் வாழ்க்கை முறையை ஆராய்வது கடினம். அதனால் தென் அமெரிக்காவில் வண்ணத்துப் பூச்சியின் அடிவயிற்றில் மிக மிக மெல்லிய 'ராடார்' சாதனத்தைப் பொருத்திப் பறக்க விடுகிறார்கள். அந்தச் சாதனத்திலிருந்து வெளிவரும் ஒலி அலைகளைக் கொண்டு அது செல்லும் இடங்களைக் கண்டுபிடிக்கிறார்கள். இந்த ராடார் சாதனம் வண்ணத்துப் பூச்சியின் எடையில் ஆயிரத்தில் ஒரு பங்குதான் இருக்கும்.

தென் அமெரிக்க நாடுகளில் உயிருள்ள அழகிய வண்ணத்துப் பூச்சிகளைப் பிறந்தநாள் பரிசுகளாகக் கொடுக்கிறார்கள். இதற்காக கொலம்பியாவில் வண்ணத்துப் பூச்சிகள் வளர்க்கப்பட்டு ஏற்றுமதி செய்யப்படுகின்றன!






விட்டில் பூச்சிகளில் ஆயிரக்கணக்கான வகைகள் இருக்கின்றன. இவற்றில் மிகவும் பெரியது 'அட்லஸ்' விட்டில் பூச்சி. இதன் இறக்கைகளில் நேசப் படம் வரையப்பட்டது போல் இருக்கும். இதன் இறக்கைகளை விரித்தால் 30 செ.மீ. இருக்கும்!

மிகச் சிறிய விட்டில் பூச்சி 'மிட்ஜெட் ஸ்பாட்கின்'. இது 2 மில்லி மீட்டரே இருக்கும்—ஒரு கொசு மாதிரி!



மெக்ஸிகோவில் உள்ள 'ராஜாளி' விட்டிலின் உறிஞ்சு குழல் மிக நீளமாக இருக்கும்—அதன் உடலைப்போல் இரண்டு மடங்கு நீளமானது!



உலகிலேயே மாறுதலான முட்டையிடும் உயிரினம் 'முன் விட்டில்'. இதன் முட்டைகள் கன செவ்வக வடிவிலானவை!


'சக்கரவர்த்தி' விட்டில்பூச்சிகள் ஒரு வித வாசனையைப் பரப்புகின்றன. அந்த வாசனையின் மூலம் ஆணும் பெண்ணும் ஒன்றை ஒன்று சுமார் 5 கி.மீ. தூரத்திற்கு அப்பால் இருந்தே தம் உணர் கொம்புகளால் அறிந்து கொண்டுவிடுகின்றன!





'ஆந்தை விட்டில்' என்று ஓர் இனம் இருக்கிறது. இவற்றின் இறக்கைகளில் ஆந்தையின் கண்கள் மாதிரியே பெரிய பெரிய படங்கள் இருக்கின்றன. ஆபத்து என்று தெரிந்தால், அவை இறக்கைகளை விரித்துக் கொண்டு படுத்துவிடும்! பார்ப்பதற்கு ஆந்தைமாதிரி பயங்கரமாக இருக்கும்! அவற்றிற்கு நல்ல பாதுகாப்பு.


தென் இந்தியக் காடுகளில், சிறிய சிட்டுக்குருவிகள் அளவில் 'ஹம்மிங்' விட்டில்கள் இருக்கின்றன. இவை வேகமாக இறக்கைகளை அசைத்துப் பறக்கும் போது, 'உங்...ங்...' என்னும் பலத்த சத்தம் கேட்கும். அதனால்தான் இவற்றுக்கு ஹம்மிங் விட்டில்கள் என்று பெயர்!




கனடாவில் 'மரணச் சின்ன' விட்டில் பூச்சிகள் இருக்கின்றன. இவற்றின் உடலில் ஒரு மண்டை ஓடும், இரண்டு எலும்புகளும் உள்ள படம் இருக்கிறது!



தாய்லாந்தில் 'ஸ்பிங்க்ஸ்' விட்டில்பூச்சி இருக்கிறது. இது எகிப்தில் உள்ள கல்லறையின் ஸ்பிங்க்ஸ் தலைபோன்ற தோற்றத்தில் இருக்கிறது. இந்தத் தோற்றத்தைக் கண்டு இதன் எதிரிகள் பயந்து ஓடிவிடுகின்றன!




கதை,படம் : தர்மா
நான்தான் ராஜா!
ஏய், அவன் வர்றான் ஓடு! ஓடு!
பொடியன்களா, என் இடத்துக்கு வராதீங்கன்னு எத்தனை முறை சொல்றது?
சே, இவனோட அராஜகம் எப்போ ஒழியுமோ?



பெரிய மீனின் அட்டகாசம் தினமும் தொடர்ந்தது. ஒரு நாள்...
இங்கே நான்தான் ராஜா!
இடி போன்ற சத்தம்.
'க்ளிங்'
வி ஷ் க்
பந்து பட்டு மீன் தொட்டி உடைஞ்சு போச்சு.
வா ஓடிடுவோம்!
பிறகு சிறிய மீன்கள் பயமின்றி இருந்தன.
பெரிய மீன் கீழே விழுந்து துடி துடித்தது. இறந்தது.



லஞ்ச் பாக்ஸில் மணல்!

✱ பகத் என்றால் பக்தன். சிங் என்றால் சிங்கம். 'ஷாஹீத் பகத் சிங்' என்றும் அழைக்கப்பட்டார். ஷாஹீத் என்றால் தியாகி என்று பொருள். சுதந்திரப் போராட்ட வீரரான பகத் சிங் தொடக்கத்தில் 'இந்துஸ்தான் சோஷலிஸ்ட் குடியரசுக் கூட்டமைப்பு' என்ற அமைப்பின் நிறுவனர்களில் ஒருவர். மார்க்ஸிய வாதியாக அறியப்பட்டவர்.



✱ இந்திய மற்றும் பிரிட்டிஷ் அரசியல் கைதிகளை வேறுபாடு காட்டாமல் நடத்த வேண்டும் என்பதற்காக அறுபத்து மூன்று நாட்கள் சிறையில் உண்ணாவிரதம் இருந்தவர் பகத் சிங்.


✱ பகத் சிங்கின் குடும்பம் தேசப்பற்று மிக்கது. சுதந்திரப் போராட்டங்களுக்குப் பெரும் ஆதரவு காட்டிய குடும்பம் அது. வீட்டில் சுதந்திரம் பற்றிய பேச்சு அடிக்கடி எழும். ஒரு நாள் சிறுவன் பகத் சிங் "அப்பா வயல்களிலெல்லாம் துப்பாக்கிகளை விதைக்கலாமே. பிரிட்டிஷாருக்கெதிராக நிறைய துப்பாக்கிகள் தேவைப்படுமே" என்றதைக் கேட்டு வீட்டுப் பெரியவர்கள் திகைத்துப் போனார்களாம்.

✱ நானூறுக்கும் அதிகமானவர்கள் பலியான ஜாலியன் வாலா படுகொலை நிகழ்ச்சி பகத் சிங்கை மிகவும் பாதித்தது. அப்போது பதினான்கு வயதுச் சிறுவனாக இருந்த பகத் சிங், ஜாலியன் வாலா பூங்காவுக்குச் சென்று, அங்கிருந்த ரத்தம் படிந்த மண்ணை தன் உணவுப் பெட்டியில் (லஞ்ச் பாக்ஸ்) சுமந்து வந்தார். தன் வாழ்நாள் முழுவதும் அதைப் போற்றிப் பாதுகாத்தார்.

✱ கொலை வழக்கில் பகத் சிங்கிற்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. பொதுவாக மரண தண்டனை காலை எட்டு மணிக்குத்தான் நடைபெறும். மக்கள் எதிர்ப்பு அதிகமாக இருக்கும் என்று அஞ்சிய அரசு, முன்தினம் இரவு ஏழு மணிக்கே மரண தண்டனையை நிறைவேற்றியது.

ஜி.எஸ்.எஸ்.





ஏ. பூபதிராஜா,
ஏழாம் வகுப்பு,
சின்னச்சாமி அம்மாள்
நகராட்சி உயர்நிலைப்
பள்ளி, திருப்பூர்.





வா.ரஞ்சித்குமார்,
எட்டாம் வகுப்பு,
திருவள்ளுவர் மேனிலைப்
பள்ளி, குடியாத்தம்

எம்.சாய்பிரபு,
ஏழாம் வகுப்பு,
பொன்னையா ராமஜெயம்
பொதுப்பள்ளி,
தஞ்சாவூர்.



உங்கள் கைவண்ணம்!





எம்.சுரேஷ்குமார்,
ஏழாம் வகுப்பு,
இந்து மேல்நிலைப் பள்ளி,
மதுராந்தகம்.





மோ.சசிபிரியா,
பதினொன்றாம் வகுப்பு,
பெரியார் மணியம்மை
பெண்கள் மேல்நிலைப்
பள்ளி, திருச்சி

'ஏப்ரல் இதழில் உலகக் கோப்பை யாருக்கு?' என்ற போட்டியை அறிவித்தோமல்லவா? வெகு சிலரைத் தவிர மற்ற அனைவருமே ஆஸ்திரேலியாதான் வெல்லுமென சரியாக யூகித்து எழுதியிருந்தீர்கள்! சிறந்த விமர்சனத்தின் அடிப்படையில் நான்கு பேரைத் தேர்ந்தெடுத்துள்ளோம். அவர்களுக்கு தலா ரூ250/- பரிசாக வழங்கப்படுகிறது. வெற்றி பெற்றவர்களுக்கு வாழ்த்துகள், உற்சாகத்துடன் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி!

தன்னம்பிக்கையே பலம்!

ஆஸ்திரேலியா சர்வ பலம் பொருந்திய அணியாகத் திகழ்கிறது. தொடர்ந்து இரண்டு முறை கோப்பையைக் கைப்பற்றியது அவர்களுக்கு ஒரு ஊக்கமாக இருக்கும். எந்த இலக்கை நோக்கியும் வீறு நடை போடும் தன்னம்பிக்கை அவர்களிடம் இருக்கிறது. தனி நபர் சாதனைக்கு மட்டும் இடம் கொடுக்காமல் கூட்டு முயற்சியுடன் நாட்டுக்காக விளையாடும் அர்ப்பணிப்பு மனப்பான்மை கொண்ட அணியாக இருக்கிறது.

- யூனிஸ் சாரிக்,
எட்டாம் வகுப்பு, ஜீவன் பள்ளி,
மதுரை

துடிப்பு...தன்னம்பிக்கை... வெற்றி!

தேவை துடிப்பு!

ஒவ்வொரு ஆட்டத்திலும் வெற்றி பெற வேண்டும் என்ற துடிப்புடனும் ஈடுபாட்டுடனும் சக வீரர்களிடையே ஈகோ இல்லாமல் விளையாடுகிறார்கள். இதுதான் ஆஸ்திரேலியாவின் பலம். மற்ற அணியினர் நன்றாக ஆடினாலும் எல்லா ஆட்டத்திலும் துடிப்புடன் இல்லாமல் முன் எச்சரிக்கையை விட்டு ஏனோ தானோவென ஆடுகிறார்கள். இது பல அணிகளின் பலவீனம்.

- வி.சரவணகுமார்,
ஏழாம் வகுப்பு,
சன்மிரா ஸ்கூல்,
பெங்களூர்

தலைவனுக்கு மதிப்பு!

இந்த உலகக் கோப்பையை வெல்வதற்கான வாய்ப்பு ஆஸ்திரேலியாவுக்கே அதிகமாக உள்ளது. ஏனெனில் அரை இறுதிக்குள் வேகமாக நுழைந்த முதல் அணி இதுதான்! இவர்களின் பலமே, எதிரணியினரின் பலத்தையும் பலவீனத்தையும் முன்கூட்டியே அறிந்துவைத்திருப்பதுதான்! நல்ல திட்டமிடல், பேட்டிங், வீரர்களைப் புரிந்து கொண்டு பந்து வீசுதல், கேப்டனின் கூர் நோக்கு, வீரர்களின் ஒற்றுமை, நல்ல பயிற்சி, நம்பிக்கை - இவையெல்லாம்

அவர்களின் பலங்களாக அமைந்து, வெற்றிக்குப் பாலங்களாக அமைந்துள்ளன. நல்ல தலைவன், தலைவனை மதிக்கும் சக வீரர்கள்... இவையே அந்த அணியின் அசுர பலம்! இலங்கையும் நியூசிலாந்தும் தங்கள் பலத்தைக் கூட்டிக்கொண்டே வந்தாலும், பேட்டிங், பௌலிங், பீல்டிங், என மூன்றிலும் முன்னணியில் நிற்கும் அனுபவ ஆஸ்திரேலியாவை இந்த ஆர்வ அணிகள் வெல்லுமா என்பது சந்தேகமே!

- ஆர்.ஜி.காயத்ரி,
பதினொன்றாம் வகுப்பு,
உலக மீட்பர் மேல்நிலைப் பள்ளி,
திசையன்விளை

விடாமுயற்சி!

இந்த முறை உலகக் கோப்பையைத் தட்டிச் செல்லப்போவது ஆஸ்திரேலியா தான். ஏனெனில் அவர்கள் தன்னம்பிக்கையும் திறமையும் ஒருங்கே பெற்றவர்கள். விடாமுயற்சி வெற்றியை தரும் என்பார்கள். அது இவ்வணிக்கே பொருந்தும்.



நியூசிலாந்து வெற்றிக் கனியை எட்ட நிச்சயம் முயற்சிப்பார்கள். இலங்கை அணியினர் போராட்ட குணம் கொண்டவர்கள். ஆனால் இந்த உலகக் கோப்பையில் அவர்கள் முன்னூறு ரன்களைக் கடக்கவில்லையே! தென் ஆப்ரிக்கா ஓர் அதிர்ஷ்டம் இல்லாத அணியாகத் திகழ்கிறது. இல்லையெனில் பங்களாதேஷிடமும் இலங்கையிடமும் மூன்று ரன்களில் தோற்பார்களா?

- இரா. பத்மபிரியா,
எட்டாம் வகுப்பு,
ரேவூர் பத்மநாபா பள்ளி,
சென்னை





பரிசு ரூ. 1000/-

இம்மாத கோகுலம் காமிக்ஸில் இடம் பெற்றுள்ள 'ராமு வீட்டுக் கோழிக் குஞ்சுகள்' கதையைப் படியுங்க! ராமு, கோழிக் குஞ்சுகளை வளர்ப்பதைப் போல, நீங்களும் உங்கள் வீட்டில் செல்லப் பிராணியாக ஏதாவது வளர்க்கறீங்களா? அதனுடன் உங்களுக்கு ஏற்பட்ட சுவையான அனுபவம் ஏதாவது இருக்கா? அதைப் பற்றி ஒரு வெள்ளைத்தாளில் ஒரு பக்கத்துக்கு மிகாமல் எழுதி, கூப்பனைப் பூர்த்தி செய்து அனுப்புங்க. சுவையான அனுபவங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு பரிசுத் தொகை ரூ.1000/- பகிர்ந்தளிக்கப்படும். ஆசிரியர் தீர்ப்பே இறுதி.

முடிவு தேதி : 15.6.07

அனுப்ப வேண்டிய முகவரி :

ஆசிரியர், கோகுலம்,
என் வீட்டுச் செல்லக்குட்டி
47, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 600 032.

என் வீட்டுச் செல்லக்குட்டி!



என் வீட்டுச் செல்லக்குட்டி - போட்டி


என் பெயர் : ....

தந்தை பெயர் : ....

வகுப்பு, பள்ளி : ....

வீட்டு முகவரி : ....

....




ராமு வீட்டுக் கோழிக் குஞ்சுகள்!




கதை : மேஜிக் மாமா
படம் : ராஜி

வண்ணம் தீட்டுங்கள்!


இந்தப் படத்தை
உங்கள் கைவண்ணத்தால்
அழகுபடுத்துங்க!





புள்ளிகளை இணையுங்கள்!

ஒன்று முதல் முப்பத்தெட்டு வரையிலான புள்ளிகளை இணைத்து உருவத்தைக் கண்டுபிடியுங்கள்!









வெட்டுங்கள்! ஒட்டுங்கள்!

இந்தப் படத்திலிருந்து
ஆறு துண்டுகள் தனியே உள்ளன.
அவற்றை
வெட்டியெடுத்து சரியான இடத்தில்
ஒட்டுங்கள்!







அப்போது...
வவ்!
வேலு வீட்டு நாய் பாய்ந்து வந்தது.
வேலு, நாயைப் பிடி.
இது பார்க்க தமாஷா இருக்கு.
முட்டாள்! கொஞ்ச நேரம் விட்டா, உன் நாய் கோழிக் குஞ்சுகளைக் கொன்னுடும்.
யாரைடா முட்டாள்னு சொன்னே?

பூவை அடைய...


தேனீ பூவை அடைய ஹெல்ப் பண்ணுங்க!





என்னைப் போல யாரு?

மூணு பேருல என்னை மாதிரி இருக்கறது யாருன்னு சொல்லுங்க பார்க்கலாம்!



விடை வேறு பக்கம்



டைம்



✍	1	2	3	4
திங்				
செவ்				
புதன்				
வியா				
வெள்				
சனி				













5
6
7
8
Dharma..



அங்கே...
ஹலோ குட்மார்னிங்!
இங்கேயும் வேலு!




வேலு, இது கொஞ்சமும் சரியில்லே. நீ ஏன் இங்கே வந்தே?
ஏன், இது உனக்கு மட்டும் சொந்தமான இடமா என்ன?

வால்களை வரையுங்கள்!



ஓவியர் எங்களுக்கு வால்களைச் சரியா வரையலை, நீங்க வரையுங்க குட்டீஸ்!








கண்டுபிடி! கண்டுபிடி!

நிழல்களைப் பார்த்து மிருகங்களின் பெயர்களைக் கண்டுபிடியுங்கள்!





விடை
வேறு பக்கம்





எத்தனை

இரண்டு படங்களுக்கிடையே
எத்தனை
வித்தியாசங்கள் உள்ளன?





வித்தியாசங்கள்?

விடைகள் வேறு பக்கம்









விடை
எதிர்ப் பக்கம்



என்ன இது? என்ன இது?

இங்குள்ள பொருட்கள்
என்னவென்று தெரிகிறதா?





என்னைப் போல யாரு?

எண் : 3









என்ன இது? என்ன இது?

லேப்-டாப், சைக்கிள், டெடிபேர், ஸ்கூல் பேக்.

கண்டுபிடி! கண்டுபிடி!

1. ஒட்டகம்
2. சிங்கம்
3. நீர் யானை
4. நரி
5. காண்டாமிருகம்

விடைகள் பக்கம்



எத்தனை வித்தியாசங்கள்?

1. தலைமுடி
2. பல்
3. காது
4. உடையின் நிறம்
5. வண்டியின் புகை





சவால்!

இங்கே
எத்தனை பறவைகள்
உள்ளனவென்று
எண்ணிப் பாருங்கள்!





அருண் ஆறாம் வகுப்பில் படிக்கிறான். அவன் தங்கை அம்பிகா இந்த வருடம் எல்.கே.ஜி. சேர்ந்திருக்கிறாள். இருவரும் ஆட்டோவில் பள்ளிக்குச் செல்கிறார்கள். அம்பிகாவுக்குப் பள்ளி செல்லும் பழக்கம் புதுசு என்பதால், பள்ளிக்குக் கிளம்பும் போதெல்லாம் அழுது ஆர்ப்பாட்டம் பண்ணுகிறாள். ஒருநாள் கடுமையான காய்ச்சலே வந்துவிட, பயந்துபோய் அருணும் அம்மாவும் அம்பிகாவை குடும்ப டாக்டரிடம் அழைத்துச் செல்கின்றனர். மருத்துவமனையில்...

டாக்டர் : வாங்க, யாருக்கு உடம்பு சரியில்லை?



பள்ளி பயம் போயாச்சு!

அருணின் அம்மா : அம்பிகாவுக்குக் காய்ச்சல் தீயாப் பொரியுது டாக்டர்! சீக்கிரம் பாருங்க.

டாக்டர் : (பரிசோதித்துக்கொண்டே) பயப்பட வேண்டாம். இது குழந்தைகளுக்கு வருகிற சாதாரண காய்ச்சல்தான். ஊசி போட்டு மருந்து கொடுத்தா சரியாயிடும்.

அருண் : இந்தக் காய்ச்சல் ஏன் வருது, அங்கிள்?

டாக்டர் : இது 'பள்ளி பய'த்தினால் வருது. இதுவரை வீட்டில்

டாக்டர் கு.கணேசன்

அம்மா, அப்பா, தாத்தா, பாட்டி அரவணைப்பில் இருந்து பழக்கப்பட்ட குழந்தை, திடீரென்று ஒரு புதிய இடத்தில், புதிய சூழலில் விடப்படும்போது என்னவோ ஏதோவென்று பயந்துவிடுகிறது. குறிப்பாக அம்மாவிடமிருந்து பிரிக்கப்பட்டு விட்டோம் என்கிற உணர்வும் ஏக்கமும் அதன் மனத்தைப் பாதிக்கிறது. இந்தப் பாதிப்பு உடலில் சில வேதியியல் மாற்றங்களை ஏற்படுத்துகிறது. இதன் விளைவே காய்ச்சல்.

அம்மா : இந்தக் காய்ச்சல் வராமல் தடுக்க முடியாதா, டாக்டர்?

டாக்டர் : முடியுமே! குழந்தைக்குப் பள்ளியில் 'அட்மிஷன்' கிடைத்ததுமே, அடிக்கடி அதனிடம் பள்ளி பற்றிய விவரங்களைச் சொல்ல வேண்டும். பள்ளிக்கு ஏன் செல்ல வேண்டும்? எதற்குப் படிக்க வேண்டும்? போன்ற விவரங்களைச் சொல்லிப் புரிய வைக்க வேண்டும். குறிப்பாக புதிய குழந்தைகளின் நட்பு, பொம்மை விளையாட்டு, கம்ப்யூட்டர் விளையாட்டு போன்ற பல வகை விளையாட்டுகள் அங்கு கிடைப்பதைப் புரியும்படி சொன்னால், குழந்தைக்குப் பள்ளி செல்லும் ஆர்வம் பிறக்கும். அருண், நீயும் உன் தங்கைக்குப் பள்ளிக்குச் செல்வதன் அருமையைப் புரியவைக்க வேண்டும்.

அம்மா : இனிமே குழந்தைக்கு இம் மாதிரி பாதிப்பு வராம எப்படித் தடுப்பது, டாக்டர்?

டாக்டர் : முதலில் வகுப்பாசிரியரைச் சந்தித்து குழந்தையை அறிமுகம் செய்து வையுங்கள். மற்ற ஆசிரியர்களுடனும் உங்கள் நட்பை நன்கு வளர்த்துக் கொள்ளுங்கள். அம்மாவுக்கு அறிமுகமானவர்கள்தான் இங்கு இருக்கிறார்கள் என்கிற பாதுகாப்பு உணர்வை இது ஏற்படுத்தும். இது குழந்தைக்குப் 'பள்ளி பயம்' ஏற்படுவதைத் தடுக்கும். மேலும் குழந்தை வீட்டிற்கு வந்ததும் பள்ளியில் என்ன நடந்தது என்பதைக் கேட்டு, அது சரியாகச் சொன்னால் தட்டிக் கொடுத்துப் பாராட்ட வேண்டும். சொல்லத் தயங்கினால், நீங்களே சில கேள்விகளைக் கேட்டுத் தூண்ட வேண்டும். உதாரணமாக, 'பாபா பிளாக் ஷீப் சொல்லிக் கொடுத்தாங்களா?' 'பாட்டி வடை சுட்டக் கதை சொன்னாங்களா?' என்று கேட்டால் குழந்தை பதில் சொல்லும். 'அப்படிச் சொல்லத் தொடங்கினாலே பள்ளியின் மீது ஆர்வம் வந்துவிடும். பிறகு போகப்போக பள்ளி பற்றிய பயம் போய்விடும்.'

அருண் : அங்கிள், என் தங்கை ஸ்கூல்லே இந்த வாரம் முழுவதும் ஒண்ணுமே சாப்பிடல, இதற்கு என்ன செய்யறது?

டாக்டர் : இதுவரை வீட்டில் நினைத்த நேரத்தில் சாப்பிட்டு விளையாடித் திரிந்த குழந்தைகள் பள்ளிக்குச் செல்ல ஆரம்பித்ததும், குறிப்பிட்ட நேரத்திற்குள் சாப்பிட்டு முடிக்கும்

சுழல் கோப்பை!

கோகுலம் இதழில் ஓராண்டில் எந்தப் பள்ளியின் படைப்புகள் அதிகம் இடம் பெறுகின்றனவோ அந்தப் பள்ளிக்குச் சுழல் கோப்பை வழங்கி வருகிறோம். இந்த ஆண்டு உங்கள் பள்ளிக்குச் சுழல் கோப்பை கிடைக்க, படைப்புகளை உடனே அனுப்பி வையுங்கள். உங்கள் நண்பர்களையும் எழுதச் சொல்லுங்கள்.



நடைமுறையைக் கடைப்பிடிக்க வேண்டியுள்ளது. குறிப்பிட்ட நேரத்திற்குள் சாப்பிட்டு முடிக்க வீட்டிலேயே குழந்தையைப் பழக்கப்படுத்தணும். மினி இட்லி, குட்டி குட்டியாய் தோசை, முக்கோண வடிவில் சான்ட்விச் என்று வித்தியாசமாகச் செய்து கொடுக்கலாம். இது குழந்தைக்கு உணவின்மேல் அதிக ஆர்வம் ஏற்பட பெரிதும் உதவும்.


அம்மா : சரி, டாக்டர். நர்சரியில் படிக்கும் குழந்தைக்கு என்ன உணவுகள் தரலாம்?



டாக்டர் : பொதுவாக இந்த வயதில் காலை உணவு சத்தாக இருக்க வேண்டும். அதற்கு காரட், பீன்ஸ், உருளைக்கிழங்கு போன்றவற்றைத் துருவிப் போட்டு தயாரித்த இட்லி, இடியாப்பம், ஊத்தப்பம், தோசை, பருப்பு போட்டு தயாரித்த பணியாரம், பாலுடன் கலந்து சாப்பிடும் கார்ன் பிளேக்ஸ் போன்றவற்றில் ஒன்று மாற்றி ஒன்று காலையில் தரலாம். மதிய உணவுக்கு அரிசி சாதம். இதனுடன் வேகவைத்த பருப்பு அல்லது சாம்பார் ஒரு கப், காரட், கீரை, பட்டாணி, பீட்ரூட், முட்டைக்கோஸ், காளிபிளவர், அவரை, புடலங்காய், பீர்க்கங்காய், பூசணிக்காய் போன்றவற்றில் ஒன்றை, இரண்டு மேஜைக் கரண்டிகள், காரட், தக்காளி, வெள்ளரி போன்றவற்றில் இரண்டு துண்டு, தயிர் சாதம் அரை கப் கொடுத்தனுப்பலாம். இது தவிர தினமும் இரண்டு கப் பால், வாரத்திற்கு நான்கு முட்டைகள், தினமும் ஒரு கப் ஆரஞ்சு அல்லது ஆப்பிள் சாறு தர வேண்டும். வேக வைத்த கொண்டைக்கடலை, சுண்டல், கடலைமிட்டாய், எள்ளுருண்டை, தேனில் ஊற வைத்த பேரிச்சம்பழம் போன்றவற்றை மாலைநேர சிற்றுண்டியில் தரலாம். இந்த உணவுகளின் அளவும் அவசியமும் குழந்தைக்குக் குழந்தை மாறுபடும். குழந்தையின் தனிப்பட்ட விருப்பத்துக்கேற்ப சில மாற்றங்களைச் செய்து கொடுத்தால் உணவின் மேல் ஆர்வம் இன்னும் அதிகரிக்கும். கடைசியாக ஒன்று, குழந்தைகளுக்கு சிப்ஸ், சாக்லேட், ஐஸ்கிரீம், பீட்சா, மென்பானங்கள் போன்ற நொறுக்குத் தீனிகளைத் தராதீர்கள். இவை குழந்தையின் பற்களைப் பதம் பார்த்துவிடும்.

அம்மா : ரொம்ப நன்றி டாக்டர் நாங்க போய்ட்டு வர்றோம்.

அருண் : பை, அங்கிள்!



* ருட்யார்ட் கிப்ளிங்

தி ஜங்கிள் புக்!

வால்ட் டிஸ்னியின் பிரம்மாண்ட தயாரிப்புகளில் 'தி ஜங்கிள் புக்' (The Jungle Book) என்கிற திரைப்படத்தை எல்லோருமே பார்த்திருக்கக் கூடும். காட்டிலே கண்டெடுக்கப்பட்டு, காட்டு விலங்குகளின் அரவணைப்பிலேயே வளர்ந்த 'மௌக்லி' (Mowgli) கதாபாத்திரத்தை யாரும் மறந்திருக்கவும் முடியாது.

உலகம் முழுவதும் வெற்றிகரமாக ஓடி, வசூலை அள்ளிக் குவித்த 'தி ஜங்கிள் புக்' திரைப்படத்தின் கதாசிரியர், "ஜோசப் ருட்யார்ட் கிப்ளிங்" (Joseph Rudyard Kipling) என்பவர்.

'ஜான் லாக்வுட் கிப்ளிங்' - 'ஆலிஸ்' தம்பதிக்கு மகனாகப் பிறந்தவர்தான், 'ருட்யார்ட்'. இவர்கள் லண்டனில் இருந்த பொழுது, தாய் 'ஆலிஸ்'-க்கு 'மும்பை ஸ்கூல் ஆஃப் ஆர்ட்ஸ்' (Mumbai School of Arts) என்கிற இந்தியப் பள்ளியில் ஆசிரியர் வேலை கிடைக்கவே, அவர் மும்பை வந்து ஆசிரியர் பணியை மேற்கொண்டார்.

அப்பொழுது மும்பையில், 1865-ஆம் ஆண்டு, டிசம்பர் 30-ஆம் தேதி பிறந்தார் 'ருட்யார்ட் கிப்ளிங்'. சிறிது குட்டையான உருவத்துடன் சிறு வயது முதலே தடிமனான மூக்குக் கண்ணாடி அணிந்ததால் பலர் இவரை 'குட்டையன்', 'சோடா புட்டி' போன்ற கேலிச் சொற்களால் அழைத்தனர்.

தன் உருவ அமைப்பைப் பற்றி கொஞ்சம் கூட தாழ்வு மனப்பான்மை கொள்ளாமல், சாதிக்க வேண்டும் என்கிற வெறியுடன் பேனாவைப் பிடித்து எழுதத் தொடங்கினார் கிப்ளிங்.


இருபத்து நான்கு வருடங்கள் இந்திய மண்ணில் இருந்த கிப்ளிங், கதை, கட்டுரை, சிறுவர் இலக்கியம் என்று தமது எண்ணங்களை எழுத்தில் பதித்தார்.

1889-ல் இந்தியாவை விட்டு, சிங்கப்பூர், ஜப்பான் வழியாக லண்டனுக்

குப் பயணமாகி பயணக் கட்டுரைகளை யும் எழுதினார்.

நாவலாசிரியர், கவிஞர், எழுத்தாளர், சிறுகதை எழுத்தாளர் என்று பல வடிவங்கள் எடுத்திருந்திருந்தாலும் 'கவிஞர்' என்கிற அடைமொழியே அவரை அதிகமாகச் சார்ந்திருந்தது.

1894-ல் 'தி ஜங்கிள் புக்' கதையை 'வால்ட் டிஸ்னி' படமாகத் தயாரித்தது. பிறகு, 'தி செகண்ட் ஜங்கிள் புக்' என்



கிற கதையை எழுதினார். இவரின் ''மாண்டலே'' என்கிற கவிதையும் 'ஜஸ்ட் சோ ஸ்டோரிஸ் ஃபார் சில்ரன், (Just So Stories for Children)-ம் மிகவும் பிரபலமானவை.

'ஸ்வீடிஷ் அகாதெமி' (Swedish Academy) இவருடைய எழுத்துக்களைப் பாராட்டி, 1907-ல், ஆங்கில இலக்கியத்திற்கான நோபல் பரிசினை வழங்கி கௌரவித்தது. குறைந்த (42) வயதில் நோபல் பரிசு பெற்றவரும், அப்பரிசைப் பெற்ற முதல் ஆங்கில எழுத்





தாளரும் கிப்ளிங்தான்.

இவர் ஒரு முறை நோய்வாய்ப்பட்டிருந்த பொழுது ஒரு பத்திரிகை கிப்ளிங் இறந்துவிட்டார் என்று தவறாகச் செய்தியைப் பிரசுரம் செய்திருந்தது. அதைப் படித்தவர் 'ஐயா உங்கள் பத்திரிகைக்கு நான் சந்தாதாரர். ஆகையால் மறக்காமல் எனக்கு எப்போதும்போல் பத்திரிகை அனுப்பி வையுங்கள்' என்று எழுதிப் போட்டார்.

லண்டனில் 1936-ஆம் ஆண்டு, ஜனவரி 16-ல் உயிர் நீத்தார் கிப்ளிங்!

மாலதி சந்திரசேகரன்

உதவப் பழகு!



பசு என்ன செய்யும்?
பாலைத் தந்து உதவும்;
காளை என்ன செய்யும்?
காலம் உழுது உதவும்!

நாய் என்ன செய்யும்?
நன்றியோடு பழகும்;
பூனை என்ன செய்யும்?
புரட்டு எலியை விரட்டும்!

மரம் என்ன செய்யும்?
மழை வர உதவும்;
செடி என்ன செய்யும்?
சின்னப் பூக்கள் சிந்தும்!

எதுவும் நமக்கு உதவும்
இயற்கை தந்த வாறு;
உதவும் அவற்றைப் பாரு,
உதவி செய்யப் பழகு!

- திலீபன்

வட்ட நிலா!



வட்ட நிலா காயுது
வானில் சுற்றித் திரியுது
எட்ட நின்னு சிரிக்குது
கிட்ட வரவும் பார்க்குது!


மேகம் போர்த்தி மறையுது
மீண்டும் வந்து தோன்றுது
வேகமாக ஓடினால்
விரைந்து பின்னே வருகுது!

சோலை மரங்கள் உச்சியில்
விளக்கு போல ஜொலிக்குது
பாலைப் போன்ற ஒளியினை
புவியின்மீது பாய்ச்சுது!

வட்ட நிலா போலவே
விண்ணில் நானும் சுற்றுவேன்
திட்டமாகச் செல்லுவேன்
திசைகள் கண்டு திரும்புவேன்!

- சாயா,
சென்னை

தெப்பக்குளம்!





எங்கள் ஊர்த் தெப்பக்குளம்
எழில் நிறைந்து விளங்குது!
மஞ்சள் வெயில் பட்டுத்தான்
மாலை அழகைக் கூட்டுது!

நீர் நிறைந்து சிறக்குது
நித்தம் கூட்டம் கூடுது
அம்மன் பவனி இதிலேதான்
ஆனந்தமாய் நடக்குது!

இரவு நேர மின்னொளியில்
இந்திர லோகம் ஆகுது!
உறவும் நட்பும் சூழ்ந்ததில்
ஊற்றாய் மகிழ்ச்சி பொங்குது!

\- அன்பிற்கினியவன்





✱ உலகின் மிகச் சிறிய தேசிய கீதம் ஜப்பான் நாட்டு தேசிய கீதமாகும். இது வெறும் நான்கு வரிகளை மட்டும் கொண்டதாகும். ஜப்பான் நாட்டு தேசிய கீதத்தின் பொருள்:

உங்களது ஆட்சி, பத்தாயிரம் ஆண்டு கால ஆட்சி. ஆளுங்கள், ஆண்டவரே ஆளுங்கள். எதுவரை என்று கேட்கிறீர்களா? இன்றைய கூழாங்கற்கள் மாபெரும் பாறையாக உருவாகும் வரை ஆண்டவரே எங்களை ஆளுங்கள்!

✱ லியானோர்டோ டாவின்சி ஒரு சிறந்த ஓவியர் மட்டுமின்றி சிறந்த என்ஜினியராக, பொறியியல், புவியியல் நிபுணராக, கட்டடக் கலைஞராக விளங்கினார்.

✱ பிளைவுட் அட்டையைக் கண்டுபிடித்தவர் இம்மானுவெல் நோபல் என்பவராவார். இவர் வெடிமருந்தைக் கண்டுபிடித்து நோபல் பரிசையும் உருவாக்கிய ஆல்பர்ட் நோபலின் தந்தை.

✱ வட துருவத்தில் மார்ச் 21-ல் சூரியன் உதயமாகி செப்டம்பர் 20 வரை தொடர்ந்து ஒளி வீசும். இதற்கு நள்ளிரவு சூரியன் என்று பெயர்.

✱ இம்மானுவேல் நோபல்



✱ அரசுப் பணிகளுக்கான சிறப்புத் தேர்வு நடத்தி தகுதியானவர்களைத் தேர்ந்தெடுக்கும் முறையை, முதன்முதலில் அறிமுகப்படுத்திய நாடு சீனா. அதன் பின்னரே பிரிட்டன் இம்முறையை அறிமுகப்படுத்தியது.

✱ கசகசாவிலிருந்து மார்பைன் என்ற மருந்தை பிரித்தெடுத்தவர் ஜெர்மன் நாட்டைச் சேர்ந்த 'பிரடெரிக் வில்ஹெல்ம் ஆடாம் பெர்டினான்ட் செர்ட்டர்னர்'. இம்மருந்து, தூக்கம் தரும் தன்மை உடையதாக இருந்ததால், ரோமானிய தூக்க கடவுளான மார்பியோஸின் பெயரால் மார்பின் எனப் பெயரிடப்பட்டது.


நள்ளிரவு சூரியன்!




சா. அனந்தகுமார்


சாயம் கேட்ட சிங்கராஜா!




பிறகு...
அதோ ஒரு பொண்ணு...
ஹாய் பொண்ணே!
ஐயோ...!
ஃ! பயப்படாதே...
என் மீசைக்கு சாயம் வேணும், தர்றியா?
சாயமா?
இல்லேன்னு சொல்ல போய் கோபத்துல ஏதாவது பண்ணிட்டா?- தந்திரம் செய்வோம்.
இந்த ஆற்றில் குதிச்சாலே போதும்...அந்த மகிமை இருக்கு.
நிஜமாவா...?


இதுல சாயம் இருக்கா?
ஆமாம்!
சீக்கிரம் குதிங்க!
இதோ, இப்பவே.
முட்டாள் ராஜா ஆற்றில் பாய்ந்தார்
ஐயா இனி இளமை ராஜாதான்!
ஆனால் -
ஐயோ, இப்படி இழுக்குதே
உதவி!
எப்படியோ சிங்கராஜா சமாளித்துக் கரையேறியது.
ஐயோ சாமி, சாயம் பூசிக்கறது, இவ்வளவு கஷ்டமா? வேணாம்டா!
நான் இயற்கை அழகோட இருந் துடறேன்.
சிங்கராஜா காட்டுக்குள் சென்றது.


சாதனைத் தளிர்கள்





திருவண்ணாமலை மகரிஷி மந்திர் பள்ளியில் ஐந்தாம் வகுப்பு படிப்பவர் தாமினி. இவ்வாண்டு ஜனவரி மாதம் மாநில அளவில் நடத்தப்பட்ட பொது அறிவுத் தேர்வில் (Triple A- Academy for Aptitude Achievement) மாநில அளவில் நான்காமிடத்தைப் பெற்று பாராட்டும் சான்றி





பேச்சு அரசன் சஷ்டி!



கோவை எஸ்.டி.எ மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் ஒன்பதாம் வகுப்பு படிக்கும் சஷ்டிகுமார், தன் தாத்தாவுடன் பட்டிமன்றம், சொற்பொழிவு ஆகியவற்றுக்குச் செல்வதுண்டு. அதன் விளைவு, தானும் பேச்சாளனாக வேண்டும் என்ற ஆசை. சமீபத்தில் மாவட்ட அளவிலான பேச்சுப் போட்டியில் கலந்துகொண்டு முதல் பரிசைப் பெற்றுள்ளார். தனியார் தொலைக்காட்சிகளின் நிகழ்ச்சிகளிலும் பேசுவதற்கான வாய்ப்பு வந்துள்ளதாம்!


(கலக்குங்க சஷ்டி! வருங்காலத்தில் நாடறிந்த பேச்சாளராகணும்.)





நாமக்கல் மாவட்டம் பாண்டமங்கலத்தைச் சேர்ந்தவர் ஹரீஸ்குமார். விவேகானந்தா மெட்ரிகுலேஷன் பள்ளியில் மூன்றாம் வகுப்பு படிக்கும் இவர் பெற்றுள்ள சான்றி





தழும் பெற்றுள்ளார்.

(அடுத்த வருடம் முதலிடத்தைப் பிடியுங்கள் தாமினி. அதற்காக நமது கோகுலம் நண்பர்கள் சார்பில் அட்வான்ஸ் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்)

அறிவு இளவரசி தாமினி!

பெரிய நகரம் முதல் குக்கிராமம் வரையிலுள்ள இளம் சாதனையாளர்களை வெளிச்சமிட்டுக் காட்டும் பகுதியிது. விளையாட்டு, பேச்சு, ஓவியம் என எதுவாக இருந்தாலும் சரி, அவற்றில் மாவட்ட அளவிலோ, மாநில அளவிலோ கலந்து கொண்டு பரிசு பெற்றிருந்தால் அது குறித்த விவரங்கள், புகைப்படம், சான்றிதழின் நகல் ஆகியவற்றை அனுப்புங்கள். சிறந்தவை வெளியாகும். கோகுலம் சார்பாகவும் அவர்களுக்குப் பாராட்டுச் சான்றிதழ் மற்றும் பரிசு அளிக்கப்படும். மறக்காமல் பள்ளி, வீட்டு முகவரியைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். முக்கியமான நிபந்தனை, அந்தச் சாதனை கடந்த ஓராண்டுக்குள் நிகழ்த்தப்பட்டதாக இருக்க வேண்டும். பழையது வேண்டாம்.



அனுப்ப வேண்டிய முகவரி :

கோகுலம், சாதனை தளிர்கள்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல்,
சென்னை - 32.



ஓவியச் செல்வன் ஹரீஸ்!

தழ்கள் ஒன்று... இரண்டல்ல! மாவட்ட அளவிலான ஓவியப் போட்டியில் முதல் பரிசு, திருக்குறள் ஒப்புவித்தல் போட்டியில் மூன்றாவது பரிசு, அஞ்சல் தலை சேகரிப்பில் பரிசு என, சான்றிதழ்களாக குவித்துள்ளார். வாழ்த்துகள்!

(சகலகலா ஹரீஸுக்கு சபாஷ் போடுங்கள் நண்பர்களே!)


குருவி சொன்ன அறிவுரை!

மழையில் குரங்கு நனைந்ததாம்
மரத்தின் அடியில் வந்ததாம்
அழகு குருவி கண்டதாம்
அதன்மேல் இரக்கம் கொண்டதாம்

குரங்கின் இடத்தில் அறிவுரை
கூற அதுவும் நினைத்ததாம்
பெரிய மனசு கொண்டுமே
பேசத் தொடங்க லானதாம்

"குரங்கே உனது கையினால்
கூடு கட்டிக் கொண்டுமே
இருக்க லாமே இன்பமாய்
ஏனோ துன்ப மடைகிறாய்?

என்னைப் பாராய் மூக்கினால்
எளிய கூடு கட்டியே
இன்ப மாக வாழ்கிறேன்"
என்று குருவி சொன்னதாம்.







குருவி பேச்சைக் கேட்டதும்
குரங்கு கோபம் கொண்டதாம்
''பெரிய மனிதர் போலவே
பேசு கின்றாய் நீயுமே

ஊசி மூஞ்சிக் குருவியே
உரைத்தாயா எனக்கு அறிவுரை!
பேசும் மனிதர் போலவே
பிறவி எடுத்தேன் நானுமே

என்போல் கைகால் உனக்கிலை
எனது வலிமை உனக்கிலை
என்னைக் கேலி செய்கிறாய்
எனது பலம்பார்!'' என்றதாம்

குரங்கு கோபம் பீறிடக்
கூட்டைப் பிரித்துப் போட்டதாம்
குருவி பயந்து பறந்ததாம்
கூட்டை இழந்து தவித்ததாம்

மூடர்க்(கு) உதவி ஊசியின்
முனையின் அளவு செய்யினும்
கேடு வந்து சேருமாம்
கேட்பீர் இதனைச் சிறுவர்களே!

❖ ❖ ❖

ப. இனியன்


சூப்பர் கையெழுத்து!



ச.நிவேதா
ஐந்தாம் வகுப்பு,
காமராஜ் நிறை நிலைப்பள்ளி,
திருப்புவனம்.

அறிவியல் மேதை அப்துல்கலாம்

டாக்டர் ஆ.ப.ஜெ. அப்துல்கலாம் இராமேஸ்வரத் தீவில் 1931-ல் பிறந்தார். இவர் விண்வெளித்துறை, பாதுகாப்புத் துறை, அணுசக்தித் துறை போன்றவற்றில் சாதனை புரிந்தார். சூப்பர் சோனிக், ஹெலிகாப்டர் போன்ற விமானங்களையும், தனது சொந்த தொழில் நுட்பத்தில் அக்னி, பிரித்வி, திரிசூல், ஆகாஷ் போன்ற ஏவுகணைகளையும் வடிவமைத்து வெற்றி கண்டார். 1998 மே 11ல் நடத்தப்பட்ட அணுகுண்டு வெடிப்பு சோதனையையும், சாதனைகளையும் பாராட்டி அரசு பல்வேறு உயர் பதவிகள் மற்றும் விருதுகளையும் வழங்கி உள்ளது.



சி.எஸ்.விக்னேஷ்
இரண்டாம் வகுப்பு,
எஸ்.பி.ஓ.ஏ. மெட்ரிக்
மேல்நிலைப் பள்ளி,
சென்னை.

மருத்துவப் பழமொழிகள்

கோழைக்கு எதிரி தூதுவளை - நம்
குடும்பத்தின் தெய்வம் துளசி இலை.
கண்ணுக்கு நன்மை செய்யும் கரிசலாங்கண்ணி.
மஞ்சள் காமாலைக்கும் மருந்தாகும் கரிசலாங்கண்ணி.



வை.செ.மதுப்ரீதா
எட்டாம் வகுப்பு,
ரோஸ் மேரி மெட்ரிக்
மேல்நிலைப் பள்ளி,
பாளையங்கோட்டை.

சுவாமி விவேகானந்தர்

பாரதநாட்டின் பலவித பிரச்சினைகளுக்குத் தீர்வு காண சுவாமி விவேகானந்தரின் கருத்துக்களை அறிந்து செயல்படுவது மிகவும் இன்றியமையாததாகும். நாட்டிற்குத் தொண்டு புரிய முக்கியமானவை மூன்று என்று சுவாமிஜி குறிப்பிடுகிறார். அவை, * முதலாவதாக, ஏழை எளியவர்களிடம் அன்பு வேண்டும். அவர்களது துயரத்தைத் துடைக்க வேண்டும் * இரண்டாவதாக அன்பும் ஆர்வமும் நடைமுறையில் செயல்படுத்தப்படாவிட்டால் பயனில்லை. ஆகவே நமது ஆர்வம் செயல்வடிவம் பெற வேண்டும் * மூன்றாவது, ஆண்மை வேண்டும் எல்லோரும் சாதித்துத் திறை போதிலும் நாணயத்தை செயல்படுத்த, தயங்காத வலிமை வேண்டும். இந்த நிறை பண்புகளும் உள்ளிடம் இருத்தல் வேண்டும்.



கடந்த இதழில் கேட்கப்பட்ட கேள்விகளும் உங்கள் பதில்களும்:

1. பாடப் புத்தகம் அல்லது நோட்டுப் புத்தகத்தின் முதல் பக்கத்தில் எழுதி வைத்துக் கொள்ள உற்சாக மான, தன்னம்பிக்கையூட்டும் இரண்டு வரிகளைச் சொல்லுங்கள்...

'இன்று இமை விழித்துப் படித்தால்
நாளை சுமை இன்றி வாழலாம்'

- எஸ். உதயமூர்த்தி, பதினொராம் வகுப்பு அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, பனப்பாக்கம்.

கல்விக் கடலில் முத்தெடு;
கடமையைச் செய்து நற்பெயர் எடு!

- ஜி. சாய்லட்சுமி, ஒன்பதாம் வகுப்பு, ஸ்ரீ சாரதா மெட்ரிக்குலேஷன் மேல் நிலைப் பள்ளி, அரியகுளம்.

2. மகாகவி பாரதியார் எத்தனை முறை (எத்தனை ஆண்டுகள்) சிறை சென்றிருக்கிறார்?

பாரதியாரை கைது செய்ய பிரிட்டிஷ்



ஊசியிலைக் காடுகள்!

அரசு பலமுறை முயன்றபோதும் அவர் சாமர்த்திய மாகத் தப்பி, தலைமறைவானார். 1918 - ஆம் ஆண்டு உலகப்போர் முடிவுக்கு வந்தது. அப்போது புதுச்சேரி யிலிருந்த பாரதி, தமிழ்நாடு திரும்பினார். அவர் கட லூரில் வந்து இறங்கியதுமே கைது செய்யப்பட்டார். இது நடந்தது 1918 நவம்பர் 20-ஆம் தேதி. 'சுதேசமித் திரன்' பத்திரிகையின் ஆசிரியர் ரெங்கசாமி மற்றும் பல்வேறு தலைவர்களின் முயற்சியால் டிசம்பர் 14-ஆம் தேதி பாரதியார் விடுதலையானார். ஆக, ஒரு மாதம் மட்டுமே சிறையில் இருந்தார்.

(இக் கேள்விக்கு யாருமே சரியான விடையளிக்க வில்லை! இது சற்றே வருத்தத்தை ஏற்படுத்தியது. சுதந் திரத்துக்காகப் பாடுபட்ட நமது தேசத் தலைவர்களின் வரலாறை படியுங்கள் தோழர்களே!)

3. இந்தக் கோடை விடுமுறையில் நடந்த ஒரு சுவையான அனுபவம்...

இந்த விடுமுறையில் நாங்கள் இராமேஸ்வரம் சென் றோம். அங்கே கடலுக்குள் நோக்கும் கண்ணாடி அணிந்து பவளப் பாறைகளைக் காணலாம். நான் அதைக் கண் டேன். பவளப் பாறைகளுக்கிடையே வண்ண வண்ண மீன்கள் நீந்தி விளையாடிக் கொண்டிருந்தன. இந்தப் பவளப் பாறைகளே மீன்களுக்கு உண வாகவும் உள்ளன வாம். அங்குள்ள படகோட்டிகள் கட லைப் பற்றி நிறைய விஷயங்களைச் சொன்னபோது அவர் களின் அறிவை எண்ணி வியந் தேன். கடலுக்கு நடுவில் மணல் திட்டுக்களைப் பார்த்ததும் சுவையான அனுபவமாக இருந்தது!



- மீ. தேவிபாலா,
பத்தாம் வகுப்பு,
சின்மயா வித்யாலயா,
இராசபாளையம்

கோடை விடுமுறையில் நான் குடும்பத்துடன் வாணியம்பாடி அருகே, ஜவ்வாது மலையிலுள்ள காவனூர் என்ற இடத்துக்குச் சென்றேன். இங்கு ஆசியாவிலேயே பெரிய, தொண்ணூற்று நான்கு அங்குல தொலை நோக்கி உள்ளது. அதன் மூலம் சந்திரன் போன்ற கிரகங்களையும், சப்தரிஷி மண்டலம் என்கிற நட்சத்திரங்களையும், பால்வெளி மண்டலங்களையும் கண்டு மகிழ்ந்தேன்!

- என்.ஆர்.ரஞ்சனி,
ஜி.ஜி.என்.
மெட்ரிக்குலேஷன் பள்ளி,
சென்னை - 44

4. 'உழைப்பு' என்று

இம்மாதக் கேள்விகள்

1. மார்ட்டின் லூதர் கிங் எந்த நாட்டைச் சேர்ந்தவர்?

2. பிறந்த குழந்தை அழுகிறது, சிரிக்கிறது... ஆனால் பேசுவதில்லையே, ஏன்?


3. காகிதம் எரியும்போது, சுருங்குவது எதனால்?

4. பத்து வரிகளுக்குள் ஒரு குட்டிக் கதை

சொன்னதும் உங்கள் நினைவுக்கு வருபவர் யார்? ஏன்?

'**உ**ழைப்பு' என்று சொன்னதும் நினைவுக்கு வருபவர்கள் தாயும் தந்தையும்தான். ஏனெனில் ஒவ்வொரு குடும்பத்திலும் தாய், தந்தையின் உழைப்பு பிள்ளைகளுக்காகவே இருக்கிறது. அவர்கள் சிந்தும் ஒவ்வொரு வியர்வைத் துளியும் பிள்ளைகளின் வளர்ச்சிக்குத்தான். என் தாய், தந்தையும் அப்படித்தான்!

- பு.இந்துமதி
பத்தாம் வகுப்பு,
எஸ்.எஸ்.கே.வி.மேல் நிலைப் பள்ளி,
காஞ்சிபுரம்.



சாதாரண டீக் கடையில் பணியாற்றி, இன்று ஆயிரக்கணக்கான பணியாளர்களைக் கொண்ட மாபெரும் நிறுவனத்துக்கு உரிமையாளர்களாக உயர்ந்துள்ள 'வி.ஜி.பி.' சகோதரர்களின் உழைப்பு என்னை ஆச்சர்யப்படுத்துகிறது. ஆகவே, உழைப்பு என்றதும் என் நினைவுக்கு வருவது வி.ஜி.பி. சகோதரர்களே!

- ஜீ.வி. நிர்மலாதேவி,
ஏழாம் வகுப்பு,
நகராட்சி மகளிர் மே.நி.பள்ளி,
திருவண்ணாமலை

5. ஊசியிலைக் காடுகள் என்றால் என்ன? இந்தியாவில் அவை எங்குள்ளன?

தரையிலிருந்து சுமார் 2,500 மீட்டருக்கு மேல் உள்ள இடங்களில் வெப்பம் குறைந்து, பனி நிறைந்து காணப்படும். இங்குள்ள தாவரங்கள், குளிரையும், பனியையும் தாங்குவதற்கு ஏற்றவாறு கூம்பு வடிவில் உயரமாக வளரும். இலைகள் ஊசி போன்று காணப்படும். இம் மரங்கள் உள்ள இடங்களை 'ஊசியிலைக் காடுகள்' என்பர். இந்தியாவில் இமயமலைப் பகுதியில் ஊசியிலைக் காடுகள் உள்ளன.

- சரியான விடையெழுதியவர்களில் குலுக்கல் மூலம் பரிசு பெறும் இருவர்:

இ. இராஜேஷ், பதினொராம் வகுப்பு,
உக்கடை அ.அப்பாவுத் தேவர்,
மேல் நிலைப் பள்ளி,
அம்மாப்பேட்டை

- கோ.இராகவிஜயா,
எட்டாம் வகுப்பு,
ஜவஹர் பள்ளி, நெய்வேலி

எழுதுங்களேன். பார்ப்போம்?

5. உங்களுக்கு கார்டூன் வரையத் தெரியுமா? இன்றைய பிரபலங்களில் யாராவது ஒருவரை கார்டூனாக வரைந்து (கறுப்புமையால்) அனுப்புங்கள்.

ஒருவரே ஐந்து கேள்விகளுக்கும் பதில் அனுப்பலாம். ஆனால், ஓர் அஞ்சலட்டையில் ஒரு கேள்வி - பதில் மட்டுமே இருக்க வேண்டும். படிக்கும் வகுப்பு, பள்ளி மற்றும் வீட்டு முகவரி அவசியம் இருக்க வேண்டும். **'அன்புடன் ஜக்கு'** என்று குறிப்பிட்டு அனுப்பவும். முடிவு தேதி **11.6.2007**

சிறுகதை




சின்னமலை என்பது பல உயரமான மரங்களும், செடி கொடிகளும் அடங்கிய பரந்த காடு. அந்தக் காட்டில் யானை, சிங்கம், புலி, குரங்கு, மான் போன்ற மிருகங்கள் வசித்து வந்தன.

அங்கே சிம்பு முயல் என்ற சிறிய முயல் வசித்து வந்தது. அது தினமும் காலையில் சூரியன் உதயமானதும் உணவைத் தேடிச் செல்லும். புல்லைக் கொறித்துக் கொறித்துத் தின்னும். சில மரங்களின் அடியில் பழங்கள் சிதறிக் கிடக்கும்; அவற்றைக் கொறித்துத் தின்பது அதற்குத் தனி ஆனந்தம். அந்தப் பழங்களைப் பார்க்கும்போதே சிம்புவுக்கு வாயில் எச்சில் ஊறும்.

ஒரு நாள் காலை வழக்கம்போல் கண்விழித்த சிம்பு, உணவைத் தேடிக் கிளம்பியது. சூரியன் சிவப்புத் தட்டு போல மேலே மேலே வந்து கொண்டிருந்தது.

சிம்பு சிறிது தூரம் நடந்து சென்ற பின், கொஞ்சம் புல் கொறித்தது. அப்போது அதற்குப் பழ மரத்தின் ஞாபகம் வரவே, வழக்கமாகப் பழம் கிடைக்கும் மரத்தின் அடியில் போய்ப் பார்த்தது. அங்கு நல்ல பழங்கள் ஏதும் காணோம். அழுகிய பழங்கள்தான் இருந்தன. அழுகிய பழங்களைத் தின்னக் கூடாதல்லவா? மேலே அண்ணாந்து பார்த்தது. அருமையான பழுத்த பழங்கள் தொங்கிக் கொண்டிருந்தன. நல்ல சிவப்பு நிறம். பார்க்கப் பார்க்க ஆசை! ஆனால் அவற்றைப் பறிக்க வேண்டுமே!



பழங்களைப் பறிக்க என்ன வழி என்று யோசித்துப் பார்த்தது சிம்பு. தாவி பறிக்க முயன்றது. பழங்கள் எட்டவில்லை. சோர்ந்து போய் ஓரிடத்தில் உட்கார்ந்தது.

அப்போது அந்த வழியாக கிட்டான் கரடி வந்தது.

''என்ன சிம்பு, சோர்ந்து போய் உட்கார்ந்திருக்கிறாய்?''- என்று மிகவும் அக்கறையுடன் விசாரித்தது.

கிட்டான் கரடிக்கு மிகவும் நல்ல சுபாவம்! எல்லோருக்கும் உதவி செய்ய வேண்டும் என்ற எண்ணம் உண்டு. உருவத்தில் பெரியதாக இருந்தாலும் யாரையும் விரட்டாது. யாரிடமும் பகைத்துக் கொள்ளாது. எனவே எல்லா விலங்குகளுக்கும் கிட்டானிடம் நல்ல மரியாதை.



''கிட்டண்ணா, அந்த மரத்தில் பாருங்கள்! எத்தனை பழங்கள் இருக்கின்றன.

திரேஸியா பவுலோஸ்



ஆனால் அவை ஒன்றுகூட எனக்கு எட்டவே இல்லை. என்ன செய்வதென்று உட்கார்ந்திருக்கிறேன்'' என்றது சிம்பு.

''என்ன செய்யலாம்? வயதாகிவிட்ட தால் என்னால் முன்பு போல மரங்களில் ஏற முடியவில்லை. வேறு வழி இருக் கிறதா என்று பார்க்க வேண்டும்'' என்றது கிட்டான்.

எனினும் கிட்டான் தாவி பழங் களைப் பறிக்க முயன்றது. அதற்கும் எட்டவில்லை.

'பாவம் கிட்டண்ணா எனக்காக எவ் வளவு கஷ்டப்படுகிறார்!' என்று பரி தாபப்பட்டது சிம்பு. அதற்குப் பெருமை யாகவும் இருந்தது. இருக்காதா பின்னே? இந்தச் சுண்டைக்காய் முயலுக் காக இவ்வளவு பெரிய கரடியண்ணா எவ்வளவு கஷ்டப்படுகிறார்?

மூச்சு வாங்க கிட்டான் நின்று கொண்டிருந்த நேரத்தில் அங்கு வந்தது ரங்கு என்ற புள்ளிமான்.

''என்ன கிட்டண்ணாவும் சிம்புவும் ஆகாயத்தைப் பார்த்துக் கொண்டு நிற்கிறீர்கள்?'' என்று கேட்டது.

''ரங்கு, சிம்புவுக்கு இந்த மரத்தி லிருக்கிற பழங்கள் வேணுமாம். ஆனால் எட்டவில்லை. என்ன செய்ய லாம் என்று யோசித்துக் கொண்டிருக் கிறோம்'' - என்றது கிட்டான்.

''கிட்டண்ணா, நான் ஒரு யோசனை சொல்றேன். நீங்க குனிஞ்சு நில்லுங்க. உங்கமேல நான் ஏறிக்கறேன். என் மேல சிம்பு ஏறிப் பறிக்கட்டும்''- என்றது ரங்கு.

''சரி, நல்ல யோசனைதான்! அதை யும் செய்து பார்த்து விடுவோம்'' என்று கூறி கிட்டான் கை, கால்களை தரையில் ஊன்றி நிற்க, அதன் மீது ஏறியது புள்ளி மான்.

சிம்புவுக்குப் பயமாகத்தான் இருந் தது. ஆனாலும் மூச்சைப் பிடித்துக்

கொண்டு ஏறியது. அப்போதும் பழங்கள் எட்டவில்லை.

''சரி விடுங்கண்ணா, அதுதான் எட்டவில்லையே'' என்று முயற்சியைக் கைவிடத் தூண்டியது ரங்கு.

''அப்படியல்ல ரங்கு, சிம்பு ஆசைப் பட்டுப் பழம் தின்ன முயற்சி செய்யும் போது நம்மாலான உதவியைச் செய்ய வேண்டாமா? அப்போதுதானே ஒருவருக்கொருவர் அன்பை வளர்த்துக் கொள்ள முடியும்?'' என்றது கிட்டான்.

''கிட்டண்ணா, நீங்க எல்லாருக்கும் உதவி செய்யறது இங்கே இருக்கிற எல்லாருக்குமே தெரியும். நம்மாலான முயற்சியைச் செய்து விட்டோம். பழம் கிடைக்கவில்லை? அதனால் நாளை பார்த்துக் கொள்ளலாம்'' என்று சோர்வுடன் சொன்னது சிம்பு.

''அப்படிச் சோர்ந்து விடாதே சிம்பு! எனக்கு இன்னொரு யோசனை தோன்றுகிறது. நாம் மூன்று பேரும் சேர்ந்து இந்த மரத்தை ஆட்டிப் பார்த்தால் என்ன? நன்கு கனிந்த பழங்கள் கண்டிப்பாகக் கீழே விழும்'' என்று யோசனை சொன்னது ரங்கு.

''நல்ல யோசனையாக தெரியுது ரங்கு. வாங்க, நாம் மூவருமே சேர்ந்து இந்த மரத்தை ஆட்டிப் பார்ப்போம். மூன்று பேரின் சக்தியும் சேரும்போது கண்டிப்பாக நல்ல பலன் கிடைக்கும்'' என்று தட்டிக் கொடுத்தது கிட்டான்.

கிட்டான், ரங்கு, சிம்பு மூன்றுமே சேர்ந்து மரத்தை அசைத்தன. நல்ல சிவப்பு நிறமுள்ள பழங்கள் 'பொல பொல'வென விழுந்தன.

''ஆகா! வெற்றி!'' என்ற மூன்றுமே பழங்களை ரசித்து ருசித்து உண்டன. ●

பூக்களைக் கண்டுபிடியுங்கள்!

போட்டி முடிவு



ஏப்ரல் இதழில் அறிவித்த (கோடை விடுமுறைப் போட்டி - 1) 'பூக்களைக் கண்டுபிடியுங்கள்' போட்டியில் நூற்றுக் கணக்கானோர் கலந்து கொண்டு சரியான விடையெழுதி அசத்தியுள்ளீர்கள்! அவர்களில் பத்து பேர் குலுக்கல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு, தலா ரூ.100/- பரிசு பெறுகிறார்கள்.

சரியான விடைகள் :

1.முருங்கைப் பூ 2.மாதுளம் பூ
3.கொய்யாப் பூ 4.கொன்றைப் பூ
5.சாமந்திப் பூ

பரிசு பெறுவோர் :

1.பா.பார்கவி, திருச்சி
2. எஸ்.டாலியா டிக்ஸி, பெத்தேல்புரம்
3. எஸ்.முத்துபாரதி, திசையன்விளை
4. வி.சுதர்ஸன், சென்னை - 28
5. எஸ்.இலக்கியா, சென்னை - 90
6. கு.தில்லைசாமி, கடையநல்லூர்
7. வா.பிரகாஷ், பொதட்டூர்பேட்டை
8. எஸ்.பூர்ணவல்லி, கொடியாலம்
9. எம்.தரணி, சென்னை - 75
10.எஸ்.சுப்புலட்சுமி, நாகர்கோவில்

இது எங்க

திருச்சி மாவட்டத்திலுள்ள வயல்களும், வாய்க்கால்களும் சூழ்ந்த கிராமம் செங்கதிர்ச்சோலை! வயல் வரப்பின் மீது, வரிசையாய்ப் பத்து பன்னிரண்டு சிறுவர் சிறுமியர்கள் ஓடிக்கொண்டிருந்தனர். ஒருவன் தடக்... தடக்... என ஓசை எழுப்பினான். சிறுமி ஒருத்தி குக்கூ... கூச்... குக்கூ... என ஒலி எழுப்பினாள். அருகில் சென்று பார்க்க, அது 'ரயில் விளையாட்டு' என்பது தெரிந்தது.


''காலையில் வயல் வரப்புல வெளையாடுவோம். வாய்க்கால் உள்ளாரயும் ரயில் ஓட்டுவோம். ராத்திரி ஆனா வீதிகள்ல ரயில் விடுவோம். நாலைஞ்சு தெருப் பிள்ளைகளும் சேர்ந்து விளையாடுவோம். கடைசியா ஒவ்வொரு தெருவுலயும் ஒவ்வொரு பிள்ளைகளையா அதுங்களோட வீட்டில எறக்கி வுட்ருவோம்!' எனக் கூறுகிறான் ஒன்பதாம் வகுப்பு பயிலும் பிரசன்னா.

'எல்லாரும் ஒண்ணா சேர்ந்து வரிசை கட்டி ஆடுற விளையாட்டு. இதுல யாருக்கும் எந்த சண்டையும் வராது. பெரிய நார்க் கயிறை நீள வட்டமா முடிச்சுப் போட்டுக்குவோம். அப்புறமா அந்தக் கயித்துக்குள்ளார



ஒருத்தர் பின்னாடி ஒருத்தர் வரிசையா நின்னு, நாங்க ஒவ்வொருத்தரும் ஒரு ரயில் பெட்டியாக மாறிக்குவோம். இந்த ரயில் விளையாட்டு ரொம்ப ஜாலி!'' என்கிறாள் ஆறாம் வகுப்பு ரக்ஷணா.

எங்க ஊரு திடலுதான் எங்களுக்குத் திருச்சி. கிழக்குத் தெரு மூலை தஞ்சா ஊரு. மேற்குத் தெரு சாவடி கோயமுத்தூரு. வடக்குத் தெரு வாய்க்கால் கரை சென்னை. தெற்குத் தெரு குடிநீர்த் தொட்டி திருநெல்வேலி. எங்க ரயில்ல வர்ற ஒவ்வொருத்தரையும் ஒவ்வொரு ஊருல எறக்கி வுட்டுடுவோம். இப்ப நீங்க எந்த ஊருக்கு சார் போகணும்?' என்று கேட்டுச் சிரித்தாள் ஒன்பதாம் வகுப்பு பயிலப் போகும் மோகனாம்பாள்.



''ரயிலு பத்தி ஒரு பாட்டு கட்டுங்க'' என்று கேட்டதும் கோரஸாகப் பாடினர்:

ஜிக்கு புக்கு ரயிலு
ஜில்லுனு பாடுது குயிலு!
இது... எங்க ரயிலு
றெக்கை இல்லாத மயிலு!
கார்டு இல்லாத ரயிலு
காசு கேட்காத ரயிலு!
தண்டவாள மில்லா ரயிலு
தாமதமா வராது மெயிலு!
டிடிஆர் ஏறாத ரயிலு
டிக்கெட் பார்க்காத ரயிலு!
யாராவது ஒருத்தர்
'ஒண்ணுக்குப்' போவணும்னா
உடனே நிக்கும் எங்க ரயிலு!
ஜிக்கு புக்கு ரயிலு
ஜில்லுனு பாடுது குயிலு!



ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு

சாரி...

''எங்கப்பா சரியான பயந்தாங் கொள்ளி!''

''ஏன்டா...?''

''ஒவ்வொரு தடவை ரோட் டைக் கடக்கும்போதும் என் கையைக் கெட்டியாப் பிடிச்சுக் கறாரே...!''

- அஜீரா, கீழக்கரை

''பாலு! என்னிடம் உள்ள பந்து சாக்லேட்டுகளில், ராமுவுக்கு ஐந் தும் சோமுவுக்கு மூன்றும் கொ டுத்தால், உனக்கு என்ன வரும்?''

''அழுகை வரும் டீச்சர்.''

- ஆர்.விஜயாரவி, ஈரோடு

''ஊசி குத்தினா எதுக்கு இரத்தம் வருது?''

''அதை யார் குத்தின துன்னு எட்டிப் பாக்க வருது.''


- ஜா.பானுப்ரியா, சிவகாசி

''டெலிபோன்ல என் 'பெல்' அடிக்குது?''

''தெரியலயே...''

''அதைக் கண்டுபிடிச்சவரு பேரு கிரகாம் 'பெல்' ஆச்சே... அதான்!''

- ஆர்.அருண்குமார், திருநெல்வேலி



ராங் நம்பர்!



"நீலகிரி மலைமேல ஒரு பஸ் தொங்கிக்கிட்டு இருக்குது. என்டா அந்த பஸ் கீழே விழல?"

"எனக்குத் தெரியலையேடா?"

"என்னா அது 'விழா'ப் பேருந்துடா."

- தி.கிஷோர்குமார், கோவை

"என்னது பேனாவைக் கண்டுபிடிச்சது உன் அம்மாவா?"

"ஆமா, தொலைஞ்ச என் பேனாவை அவங்கதான் கண்டுபிடிச்சாங்க!"

- கு.அருணாசலம், தென்காசி

"ஹலோ, காகமா? நான்தான் புறா பேசறேன்..."

"ஹலோ, காகமா? நான்தான் புறா பேசறேன்..."

"ஓஹோ, நீ கிளியா? சாரி ராங் நம்பர்!"

- அதிரா, கீழக்கரை

"உண்மையிலேயே குட்-பிரைடே நல்ல வெள்ளிக் கிழமைதான்டா."

"எப்படிடா?"

"அன்னிக்கு ஸ்கூல் லீவு விடறாங்களே!"

- சீர்காழி வி.ரேவதி, தஞ்சாவூர்










அசத்தும் அரேபியர்கள்!



இஸ்லாமின் வரலாற்றுக்கு முந்தைய காலம் என்பது, மத்திய ஆப்பிரிக்கா, ஆசியாவின் சரிதம்தான். கி.மு.10ஆம் நூற்றாண்டிலிருந்து 7ஆம் நூற்றாண்டுவரை இஸ்லாமுக்கு முந்தைய, குவதானி அரசின் சபா/ஷீபா நாகரிகம் தழைத்திருந்தது. அரேபிய தீபகற்பத்தின் தென்மேற்கு மலைப் பகுதியில் 'சபா' அரசு இருந்தது. இன்று அதன் பெயர் அசீர், ஏமன்!

இந்நாகரிகத்தின் கதைகள், செல்வம், பெருமை வெகுவாகப் பேசப்பட்டன. இதனைப் பார்த்த ரோமானியர்கள், 'அதிர்ஷ்ட அரேபியா' என பொறாமையுடன் அழைத்தனர். சபாவின் தலைநகரம் 'மாரிப்' எனப்பட்டது. (இன்றைய ஏமனுக்கு அருகில்). நோவாவின் மூத்தமகனான, 'சாமா'தான் இதனை நிறுவினார். இதிலிருந்து பிறந்ததுதான் 'சாமி' என்ற அரேபியப் பெயரும், 'செமிட்டிக்' என்ற ஆங்கிலப் பெயரும். இவர்கள் நீண்டகாலமாக, செங்கடல், ஆப்பிரிக்க கடற்கரையை ஒட்டி ஆண்டனர். அங்கு கோலோச்சிய புகழ்மிக்க அரசியின் பெயர், 'பால்கைஸ்'. இவரின் அழகு, சாந்தம், அமைதி, செல்வம், அற்புத குணம் போன்றவை பேசப்பட்டன. 'சபா'வின் அரசு, வாசனை நறுமணப் பொருட்களை உற்பத்தி செய்ததுடன் வாணிபம் செய்து பொருள் ஈட்டியது. விவசாயம் தழைத்தது; நீர்ப்பாசனம் சிறந்த முறையில் இருந்தது. மலைகளின் ஊடே கால்வாய்கள் அமைத்தனர். உலகின் பெரிய அணையான 'மாரிப்' அணை கி.மு. 2000த்தில் உருவாக்கப்பட்டது. இந்த அரேபிய அணை, உலகின் தொழில்நுட்ப அதிசயங்களுள் ஒன்றாகும்.

அரேபிய தீபகர்பத்தில் வாழ்ந்தவர்கள் அரேபியர்கள் எனப்பட்டனர். இதன் நாகரிகம் தென்பகுதி காட்டுவாசிகளால் தான் உருவாக்கப்பட்டது. இந்நாகரிகம் விவசாயம் சார்ந்ததே! இது கி.மு. 600களில் தான் செழித்தது. ஆனால் கி.மு. 1500களில், நிறைய துண்டு, துண்டு நாடுகளாகக் காணப்பட்டது. இவற்றுள் முக்கியமானவை, மினாயன், சபாயன், ஹிமையார்ட் என்பவையே. இங்கே ரோமானியர்கள் ஊடுருவத்துவங்கினர். பெர்சியர்கள் தாக்கி வெற்றி பெற்றனர்; கி.மு. 600களில் மெக்கா அரேபியர்களின் வணிகத் தொடர்பு மையமாகவும், முக்கியமான இணைப்புத் தளமாகவும் இருந்தது. கி.பி. 632ல், இஸ்லாமை உருவாக்கிய நபிகள் நாயகம் பிறந்தார். புதிய மதமான 'இஸ்லாமும்' பிறந்தது.


அரேபிய நாகரிகம் செழித்தது. அது இன்றளவும் தொடர்கிறது. இவர்கள் மத்திய கிழக்குப் பகுதியில் வாழ்ந்தாலும், இன்று கிட்டத்தட்ட இருபது நாடுகளுக்குமேல் அரேபிய நாடுகள்தான். இவர்கள் கோதுமை, பார்லி, அரிசி, சோளம், கம்பு ஆகியவற்றை முக்கிய உணவாகக் கொண்டனர். இயற்கையான எண்ணெய் வளமும் மிகுந்தது. இங்கு பல நாட்டு கலாசாரங்களைக் கைக்கொண்டு, அவற்றைச் செழுமையூட்டினர். மத்திய கிழக்கில் 'ஒரே தெய்வத்தை' வழிபட்டனர். ரொட்டி தயாரித்தனர். பேரீச்சை போன்ற எளிதில் சீரணிக்கும், சக்திமிக்க உணவை உண்டனர். வித விதமான உணவு வகைகளையும் தயாரித்தனர். அழகாக வடிவமைக்கப்பட்ட ஆடைகளை ஆண், பெண், குழந்தைகட்கு உருவாக்கினர். ஆண்கள் தலைப்பாகை அணிந்தனர். பெண்கள் உடலை மூடி உடையணிந்தனர்.



இஸ்லாமியரின் ஈடுபாடும், ஆர்வமும், அரேபிய நாகரிகத்துக்கு மிகப் பெரிய கொடையாக இருந்தன. இஸ்லாமியப் பள்ளிகளில், சமுதாயம், அறிவியல், தொழில்நுட்பம் போன்றவற்றில் பெரும் வளர்ச்சி ஏற்பட்டது. கி.பி. 9ஆம் நூற்றாண்டுகளில், கணிதம், தத்துவம், மருத்துவம், வானவியல், வேதியியல், இயற்பியல் போன்ற



ஸ்வாதி





வற்றில் பெரிய கண்டுபிடிப்புகள் நிகழ்ந்தன. கி.பி. 750 - 1250களில், அரேபிய மொழி, கலை, அறிவியல் ஆகியவற்றின் உயிர்மொழியாக விளங்கியது.

இன்றைக்கு நாம் பயன்படுத்தும் 1, 2, 3... எண்கள் அரேபிய எண்களே. வேதியலில் ரசவாதம், அல்கெமி,



ஆல்கஹால் போன்ற வார்த்தைகள் அரேபிய மொழியிலிருந்து பிறந்தவையே. விண்மீன் தொகுதிகளின் பெரும்பாலான பெயர்கள், அரேபியச் சொற்களே! கணிதத்திலும் அரேபிய சொற்கள் நிறைய உண்டு. வாசனைத் திரவியங்கள், வேதியியல், வானவியலில் விற்பன்னர்கள் அரேபியர்களே! உலகின் முதல் நூலகம் அரேபிய நூலகமே. முதல் தார் ரோடு போட்டதும், தெரு விளக்கு கொண்டு வந்ததும் அரேபியர்களே!

இன்றைக்கு வறண்ட பாலைவனமாக உள்ள சகாரா, கி.மு. 3500களில், வளம் கொழிக்கும் பூமியாகத் திகழ்ந்தது. அங்கு வாழ்ந்த மக்கள் செமிட்டிக் மொழி பேசினர். அந்த அரேபிய மக்கள், பக்கத்துப் பிரதேசமான, மெசபடோமியா, சுமேரியாவுக்குள் ஊடுருவினர். அம்மக்களுடன் இரண்டற கலந்து, சுமேரிய நாகரிகம் உருவாக உதவினர்.

அரேபிய பாலைவனத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள கோயிலின் வயது மூவாயிரம் ஆண்டுகள்! அம்மக்கள் சந்திரனை வழிபட்டதாகத் தெரிகிறது. அரேபிய வாசனைப் பொருட்களே, அக்கால பாபிலோன், எகிப்து, கிரீஸ், ஜெருசலம், ரோம் நாடுகளின் கோயில்களிலும், வீடுகளிலும் பயன்படுத்தப்பட்டன. ●

'தெரிந்த தலைவர், தெரியாத தகவல்' படித்துப் பாதுகாக்க வேண்டிய பக்கங்கள். சசகப்புலெட்சுமியின் 'கூடாது, கூடாது' கவிதை அருமையாக இருந்தது.

- எஸ்.சங்கர், புதுச்சேரி

சுட்டெரிக்கும் சூரியனின் கொடுமையை தணிக்க, டாக்டர் தந்த டிப்ஸ் சூப்பர்! சிறுவர் சங்கம் பற்றிய தகவல்களை அறிந்ததும் அடுத்த இதழுக்காக ஆவலுடன் காத்திருக்கிறேன்.

- கோ.இராகவிஜயா, நெய்வேலி

விடுமுறை சமயத்திலும் என் அறிவுக்கு வேலை கொடுத்துக் கொண்டு இருக்கும் கோகுலமே, நீ என் கையில் இருந்தால் நான் குருகுலத்தில் இருப்பதைப் போன்ற உணர்வு!

- கோ.பிரவீண்குமார், விழுப்புரம்

தர்ப்பூசணிக்குள் ஒரு சிறுவனை இணைத்து, அட்டையைப் புது யுக்தியில் குளுமைப் படுத்தி, கோகுலத்தை ஜிலுஜிலுவென தந்துவிட்டீர்கள். சபாஷ்!

- ஆர்.கே.கார்த்திக், திசையன்விளை

புது யுக்தி!

நான் சிறு வயது முதலே கோகுலத்தின் தீவிர வாசகி. அழ. வள்ளியப்பா கையெழுத்திட்டு அனுப்பிய சிறுவர் சங்க உறுப்பினர் அட்டையை இன்னும் பத்திரமாய் வைத்திருக்கிறேன். என் நான்கு வயதுப் பெண் குழந்தைக்கு இப்போதே கோகுலம் வாங்கித்தர ஆரம்பித்துவிட்டேன். கதைகளைப் படித்து அவளுக்குச் சொல்வேன்.



- ஆர்.விஜயா ரவி, ஈரோடு


'2-இன்-1' பக்கங்களில் இடம் பெற்ற பதினான்கு விதமான அம்சங்களையும் கண்டபோது இரண்டு வானவில்களை ஒரு சேர கண்டு ரசித்ததைப் போன்றதொரு சந்தோஷம் மனத்தில் தோன்றியது.


- வி.வேல்முருகன், முத்தம்பட்டிகேட்



தேன்மொழி-கனிமொழி

கருத்து, படம் : பிள்ளை




'க்ளிக்' கேலரி
"உங்களுக்கு எல்லாம்
ஸ்கூல் திறந்துட்டாங்க,
'ZOO'-வுல இருக்கற
எங்களைப் பார்க்க
இனிமே எப்போ
வருவீங்களோ!
வருத்தமா
இருக்குப்பா!"

Registered with the Registrar of Newspaper of India under No. 24280/72 Registered No. TN/CC(S)DN/109/06-08 · Licensec to post without prepayment under PMG's Licence No. WPP TN/CC(S)DN/47/06-08 · Registered as a Newspaper in Srilanka

